Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 15.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 11 வெள்ளிக்கிழமை (25.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 096

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஐ.நா. செயலாளரும் போர்க்குற்றவாளியாம்

# லிபியா மீதான தாக்குதலை கண்டித்து ஐ.நா.அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

### விமல் வீரவன்ச தலைமையேற்று நடந்தது

(கொழும்பு)

லிபியா மீது மேற்குலக நாடுகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்களுக்கு எதிராகவும் லிபியாவுக்கு ஆதரவாகவும் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. தேசிய சுதந்திர முன்னணியின் தலைவ்ரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தலைமையில் இவ் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)




## புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளுடன் நோர்வே அமைச்சர் எரிக்சோல் சந்திப்பு

(ஒஸ்லோ)

நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

சில தமிழ் புலம்பெயர் அமைப்புகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக நோர்வே ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந் சந்திப்பின்போது இலங்கை தொடர்பான நோர்வேயின் நிலைப்பாடு மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்ப் பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்காக எரிக் சொல்ஹெய்ம் இந்தச் சந்திப்பினை நடத்தியதாக குறிப்பிடப்படுகிறது.

வடக்குக் கிழக்கில் அபிவிருத்தி செய்வதற்கும் காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கும் புலம்பெயர் தமிழர்கள், இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## கடாபியின் படைகள் விரைவில் அழிக்கப்படும்

### பிரான்ஸ் உறுதி

(பாரிஸ்)

கேணல் கடாபியின் இராணுவ வல்லமை அடுத்த சில தினங்களில் அல்லது சில வாரங்களில் முற்றாக அழிக்கப்பட்டுவிடும் என்றும் அதற்கு மாதங்கள் தேவைப்படாது என்றும் பிரான்ஸின் வெளியுறவுத்துறை அமைச்சர் அலன் ஜுப்பே கூறியுள்ளார்.

லிபியா மீது நடத்தப்படும் வான் தாக்குதல்களின் வேகத்தை நியாயப்படுத்திய அவர், கடாபியின் படைகள் ஒரு வாரத்துக்குள் அழிக்கப்படும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை என்றார்.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸின் தலைமையில் செயற்படும் சர்வதேச கூட்டுப்படைகள் நேற்று கூடுதலாக வான் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இதேவேளை லிபியாவின் எதிரணியுடனான தொடர்புகளை தீவிரப்படுத்தப் போவதாகக் கூறியுள்ள பிரிட்டனின் வெளியுறவுத் துறை அமைச்சர் (20ஆம் பக்கம் பார்க்க)

## மனோ கணேசனுக்கு கூட்டமைப்பு அழைப்பு

(கொழும்பு)

அரசியல் நடவடிக்கைகளில் இணைந்து இயங்குவதற்கு தம்முடன் இணைந்து செயற்படுமாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரு மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசனை சந்தித்து இந்த அழைப்பை விடுத் (20ஆம் பக்கம் பார்க்க)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
அனைவருக்குமான நவீன அழகிய தெரிவுகளுக்கு...
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
இல. 526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.
இல. 770, 772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.



## வன்னி இறுதிக் கட்ட யுத்தத்தின் போது போர்நிறுத்தத்தை இந்தியா வலியுறுத்தியது

### மகிந்த மசியவில்லை என்கிறது விக்கிலீக்ஸ்



(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் போர் நிறுத்தமொன்று தொடர்பில் இலங்கை அரசாங்கம் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகித்ததாக விக்கிலீக்ஸ்செய்திகளை வெளியிட்டுள்ளது.

அன்றைய காலகட்டத்தில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தில் பிரதான அதிகாரியாக கடமையாற்றிய பீட்டர் பர்லே தனது தகவல் குறிப்பின் மூலம் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்துக்கு மேற்குறித்த விடயத்தை அறிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்கள்.

அதன் போதே அவர்கள் இருவருமாக இந்திய அரசின் நிலைப்பாட்டுக்கு இணங்க உடனடிப் போர் நிறுத்தமொன்றுக்கு இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளனர். அதன்பின் அவர்கள் அமெரிக்கத் தூதரைச் சந்தித்து அது குறித்து விளக்கியுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பை அடுத்துவரும் இரண்டொரு நாட்களுக்குள் வெளியிடுவார் என்று அவர்கள் உறுதியான எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஆயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை மேற்கொள்ளாது தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் தலைமையை குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்கவைத்து யுத்தத்தை முன்கொண்டு செல்வதிலேயே ஆர்வம் காட்டியதாகவும் விக்கிலீக்ஸின் தகவல் குறிப்பு மேலும் தெரிவித்தது. (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## மாணவர்களின் இஷ்டப்படி பல்கலைக்கழகம் இயங்காது

### அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தை கலைத்து விடுமாறு பல்கலைக்கழக அதிகாரிகளிடம் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கோரியுள்ளார். ஒழுங்கீனமாக செயற்படும் மாணவர்களை பொலிஸார் கைதுசெய்வதற்கு வழிவிடுமாறும் அவர் கேட்டுள்ளார்.

மாணவர்கள் பரீட்சைகளுக்கு சமுகமளிக் காவிட்டால் அவர்கள் சித்தியடைத் தவறியவர்களாக கருதப்படும் எனவும் அவர்களின் புலமைப்பரிசில் கொடுப்பனவு நிறுத்தப்படும் எனவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார்.மாணவர்களின் இஷ்டப்படி பல்கலைக் கழகம் இயங்கமாட்டாது எனத்தெரிவித்த அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பல்கலைக் கழகம் மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்னர் ஒழுங்கு நிலைநாட்டப்படும் எனவும் கூறினார். (ந-5)

வர்த்தகப் பெருமக்களே...


பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# தமிழகத்தில் காங்கிரஸை தோற்கடிக்க தேர்தல் பிரசாரக் களத்தில் குதிப்போம்

## முடிவை அறிவித்தார் சீமான்

(சென்னை)

**தமிழகத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிடும் 63தொகுதிகளிலும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு அக்கட்சியை தமிழ் நாட்டில் இல்லாது ஒழிப்பதே நாம் தமிழர் கட்சியின் தற்போதைய நிலைப்பாடு என சீமான் அறிவித்துள்ளார்.**



அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வைகோ தலைமையிலான ம.தி.மு.க. வெளியேறி தேர்தலையும் புறக்கணிப்பதாக அறிவிக்கப் பட்டிருந்த நிலையில் மற்றொரு ஈழ ஆதரவாளரான நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானின் நிலை என்ன என்ற கேள்வி எழுந்திருந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் கூடிய நாம் தமிழர் கட்சியின் ஆன்றோர் பேரவை இத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவதை மட்டும் பிரதானமாகக் கொள்வோம் என முடிபெடுத்தது.

இம்முடிபின்படி தேர்தலில் போட்டியிடாமல் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்கும் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யுமாறு பிரசாரம் மேற்கொள்வது என நாம் தமிழர் கட்சியின் ஆன்றோர் பேரவை தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவிப்பை நேற்று ஊடகவியாளர்களுக்கு வெளியிட்ட நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், இத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி போட்டியிட்டால் பெரும்பாலான வாக்குகள் தி.மு.க. அணியில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு சாதகமாகப் போய்விடும்.எனவே இத் தேர்தலைப் பொறுத்தவரை நாம் தமிழர் கட்சி நேரடியாகப் போட்டியிடுவதில்லை என்று முடிபு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தனிப்பெரும் சக்தியாக காங்கிரஸ் கட்சியை வீழ்த்த முடியாத நிலையில் நாங்கள் உள்ளோம்.எனவே காங்கிரஸ் கட்சியை எதிர்த்து களம் காணும் எதிர் அணி வேட்பாளர்கள் வெற்றி பெறும் வகையில் எதிர்ப் பிரசாரத்தை மேற்கொள்ள இருக்கின்றோம்.நாம் தமிழர் கட்சியின் ஆன்றோர் பேரவை நேற்றுமுன்தினம் எடுத்துள்ள முடிபு இது.

இத் தேர்தலைப் பொறுத்தவரை எங்களுக்கு இரட்டை இலை, முரசு ,கதிர், சுத்தியல், அரிவாள் போன்ற சின்னம் முக்கியமல்ல. காங்கிரஸ் கட்சியை அழித்தொழிக்க வேண்டும் என்ற எண்ணமே முக்கியம்.

ஈழத்தமிழர்களைக் கொன்றழித்த கட்சி காங்கிரஸ். தமிழக மீனவர்கள் படுகொலையை வேடிக்கைப் பார்க்கும் கட்சி காங்கிரஸ். தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்த கட்சி காங்கிரஸ். காவிரித் தண்ணீருக்கும் முல்லைப் பெரியாறு தண்ணீருக்கும் தமிழனை கையேந்த வைத்த கட்சி காங்கிரஸ்.

எனவே அந்தக் கட்சியே தமிழகத்தில் இனி இருக்கக்கூடாது.இனிவரும் தேர்தல்களில் எந்த திராவிட கட்சியும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டு வைத்துக் கொள்ளவும் கூடாது. அப்படி ஒரு நிலை உருவாகத்தான் இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை தோற்கடிக்கும் முடிபை எடுத்துள்ளோம்.

காங்கிரஸ் கட்சி அழிக்கப்பட வேண்டும் என்பதே நாம் தமிழர் கட்சியின் தற்போதைய நோக்கம்.அதன் பலன் யாருக்குப் போகிறது என்பது முக்கியமல்ல.பதவிக்கு வந்த பின் தமிழருக்கு எதிரான நிலைப்பாட்டை ஜெயலலிதா எடுத்தால் அப்போது அவரையும் எதிர்த்து போராட்டங்களை நடத்துவோம்.

ஜெயலலிதாவின் ஈழத்தமிழர் நிலைப்பாட்டை ஒருபோதும் நாம் தமிழர் ஆதரிக்கவில்லை.ஆனால் இந்த தேர்தல் எங்களுக்கு ஒரு கெட்டவாய்ப்பு.

வேறு வழியில்லை. எனக்கு முன் நான்கைந்து எதிரிகள் இருந் தாலும் யார் மோசமான எதிரியோ அவரை தான் முதலில் வீழ்த்த வேண்டியுள்ளது.

இத் தேர்தலில் அண்ணன் வைகோ மற்றும் அவரது கட்சி மேற்கொண்டுள்ள முடிபு குறித்து நான் எதுவும் சொல்ல முடியாத நிலையில் உள்ளேன்.அவர் சிறந்த அறிவாளி.தெளிந்த அரசியல் தலைவர். எனவே பல விடயங்களையும் யோசித்துத் தான் முடிபை எடுத்திருப்பார்.

ஆனால் அவரை அ.தி.மு.க நடத்திய விதம், கூட்டணியிலிருந்து அவர் வெளியேறும் அளவுக்கு நடந்த நிகழ்ச்சிகள் எங்கள் கட்சியினருக்கும் உலகம் முழுவ திலும் உள்ள தமிழுணர்வாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.அருமை அண்ணன் வைகோ எனது நிலைப்பாட்டை நிச்சயம் வாழ்த்துவார் என்று நம்புகிறேன்.

ஈழத்தமிழ் மக்களைக் கொன்றழித்த காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களைத் தோற்கடியுங்கள் என்பதே இந்தக் தேர்தலில் எனது ஒரே பிரசாரம்.

இத் தேர்தலில் ஈழத் தமிழினத்திற்கு காங்கிரஸ் கட்சி இழைத்த அநீதி மற்றும் இங்குள்ள தமிழர்களை தொடர்ந்து வஞ்சித்து வருவது குறித்தெல்லாம் பிரசாரத்தில் சொல்லப்போகின்றேன.

நாம் தமிழர் கட்சியின் தேர்தல் பிரவேசம் என்பது இனி வரும் இடைத்தேர்தல் ஏதாவதொன்றிலிருந்து தொடங்கும்.

2016இல் முழுவீச்சில் இருக்கும். அப்போது தமிழக மக்களுக்கு நாம் தமிழர் செய்யப்போ கும் நல்ல விஷயங்கள் திட்டங்கள் பற்றியெல்லாம் விரிவாக எடுத்துக் கூறுவேன் என சீமான் தெரிவித்துள்ளார். (ந-5)

## ரணிலுக்கு ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்தார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவான மைக்கு ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ரணில்விக்கிரமசிங்கவை வியாழக்கிழமை அதிகாலை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஜனாதிபதி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் 62ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும் ஜனாதிபதி வாழ்த்துக் கூறியதாக ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்தார்.

## மது போதையில் வாகனம் செலுத்திய சாரதியிடம் அபராதம்

மதுபோதையில் வாகனத்தை செலுத்தி சென்றசாரதி ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றது.குறித்த சாரதியை கைது செய்த சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த வழக்கை விசாரித்த சாவகச்சேரி பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை 3ஆயிரம் ரூபாய் அபராதம் அல்லது ஒருமாதகால சாதாரண சிறைத்தண்டனை என தீர்ப்பளித்தார். (ந-6,29)

## பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பத்திரிகை இயல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் நடத்தும் 3மாதகாலப் பத்திரிகை இயல் கற்கை நெறிக்கு முன்னோடியாக தேர்வுக் கற்கை நெறிகள் நாளை 25ஆம் திகதியும் மறுதினம் 26ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இத்தேர்வுக் கற்கை நெறியில் பங்குபற்ற விரும்புவர்கள் இலக்கம் 891, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் தமது பதிவுகளை மேற் கொள்ளலாம்.

இருநாள் தேர்வுக் கற்கை நெறிகள் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்.மறைக் கல்வி நடு நிலையத்தில் இடம் பெறும்

இதன் போதும் பதிவுகள் பேமற்கொள்ளப்படும் எனவும் .

இரு நாள் தேர்வுக் கற்கை நெறியின் இறுதியில் (பங்குபற்றுபவர்களுக்கான) சான்றிதழ் வழங்கப்படும். (ந-6)

## நோர்வேயின் அனுசரணைப் பணி அனுபவம் அறிக்கையாகிறது

(கொழும்பு)

இலங்கையில் அமைதி உடன்பாடு அமுலில் இருந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக நோர்வேஜியன், சுதந்திர பகுப்பாய்வுக் குழு மேற்கொண்டு வரும் ஆய்வுகள் குறித்த அறிக்கை இந்த வருடம் மேமாதம்நடுப்பகுதியில்வெளியிடப்படவுள்ளது.

இந்தக் குழுவில் நோர்வே அரசாங்கமோ கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகமோ சம்பந்தப்பட்டிருக்கவில்லை.

இந்தப் பகுப்பாய்வுக் குழுவின் செயற்பாடுகள்யாவும் சுயேச்சையானவை என்று பெயர் குறிப்பிட விரும்பாத நோர்வேத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.இலங்கையில் நோர்வே அனுசரணை மூலமாக 1997ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டுவரை அமுலில் இருந்த அமைதி உடன்பாடுகாலத்தில் அந்த நாடு பெற்றுக் கொண்ட தனித்துவமான அனுபவங்களை இந்தக் குழு ஆராய்ந்து வருவதாகவும் ஓர் அறிக்கையாக வெளியிட விருப்பதாகவும் தெரியவருகின்றது.

உலக நாடுகளில் ஏற்படும் உள்ளக முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்வது தொடர்பாக சர்வதேச விவாதங்களை நடத்துவதற்கு இந்தக் குழு வெளியிடவிருக் கும் அறிக்கை பயன்படவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.அமைதிச் செயற்பாடு அமுலில் இருந்த காலத்தில் நோர்வே அரசு வழங்கியதாகக் கருதப்படும் (2.5மில்லிய குரோனோர்) நிதி பற்றியும் இந்தக் குழு ஆராயவிருக்கின்றது.


இந்தக் குழுவின் நகல் அறிக்கை இந்த மாதம் நடுப்பகுதியில் இலங்கை அரசிடம் கையளிக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011
பெப்ரவரி 19 - ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

# நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா அவுட்; அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா

## பாகிஸ்தானுடன் 30ஆம் திகதி மோதல்



(அகமதாபாத்)

நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணியை 05 விக்கெட்டுக்களால் வீழ்த்தி இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன் மூலம் இந்திய அணி எதிர்வரும் 30ஆம் திகதி அரையிறுதியில் பாகிஸ்தான் அணியை சந்திக்கிறது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாவது காலிறுதியில் இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு வோட்ஷன்- ஹடின் ஆரம்பம் வழங்கினர்.

ஆட்டத்தின் முதலாவது ஓவரிலேயே சுழல்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வினை அழைத்தார் இந்திய அணித்தலைவர் தோனி.

இந்நிலையில் அஸ்வின் சுழலிலும் சகீர்கான் வேகத்திலும் விவேகமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர் வோட்ஷன்- ஹடின்ஜோடி.

இதில் வோட்ஷன் 38 பந்துகளில் (05 பவுண்டரிகள் உட்பட) 25 ஓட்டங்களை எடுத்து அஸ்வினின் சுழலில் ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய அணித்தலை வர் பொன்டிங் பொறுப்பான ஆட்டத்தை வழங்கினார்.

மறுமுனையில் பிரட் ஹடின் 57 பந்துகளில் அரைச்சதம் பெற அவுஸ்திரேலிய அணி 21 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் ஹடின் 62 பந்துகளில் (06 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 53 ஓட்டங்களை எடுத்து யுவராஜ் சிங்கின் சுழலில் ரெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மைக்கல் கிளார்க் 08, மைக்கல் ஹசி 03 ஓட்டங்களுடன் ஏமாற்றமளிக்க அவுஸ்திரேலிய அணி 33.3 ஓவர்களில் 150 ஓட்டங்களை எடுத்து 04 விக்கெட்டுககளை இழந்து தடுமாறியது.

எனினும் அடுத்துவந்த வைற் நிதானமாக ஆட மறுமுனையில் அணித்தலைவர் பொன்டிங் 67 பந்துகளில் அரைச்சதம் பெற்றார்.

மறுமுனையில் கமரூன் வைற் 22 பந்துகளில் 12 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டேவிட் ஹசி அதிரடியாக ஆடி கைகொடுத்தார்.

மறுமுனையில் பொறுப்பாக ஆடிய அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங் 113 பந்துகளில் தனது 5ஆவது உலகக்கிண்ண சதத்தைப் பூர்த்தி செய்தார். இது பொன்டிங்கின் 30ஆவது ஒருநாள் சதமாகும்.

இதில் பொன்டிங் 118 பந்துகளில் (17 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 104 ஓட்டங்களை எடுத்து அஸ்வினின் சுழலில் ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 260 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டேவிட் ஹசி 26 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் ஜோன்சன் 06 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரவிச்சந்திரன் அஸ்வின், சகீர்கான், யுவராஜ்சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 261 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு சேவாக்-டெண்டுல்கர் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 8.1 ஓவரில் 44 ஓட்டங்களைச் சேர்த்த போது சேவாக் 22 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 15 ஓட்டங்களுடன் வோட்சனின் பந்தில் மைக்கெல் ஹசியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து டெண்டுல்கருடன் இணைந்த காம்பீர் பொறுப்பாக ஆடி நம்பிக்கையளித்தார்.

இதில் சச்சின் டெண்டுல்கர் 61 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். எனினும் டெண்டுல்கர் 68 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 53 ஓட்டங்களை எடுத்து தைட்டின் பந்துவீச்சில் விக்கெட்காப்பாளர் ஹடினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய வீராட் ஹோலி 33 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சோபிக்கத் தவறினார்.

அடுத்து களமிறங்கிய யுவராஜ்சிங் சிறப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் காம்பீர் 63 பந்துகளில் அரைச்சதம் பெற்றார்.

இதில் கௌதம் காம்பீர் 64 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 50 ஓட்டங்களை எடுத்து ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய தோனி 07 ஓட்டங்களுடன் பிரட் லீ வேகத்தில் ஆட்டமிழக்க இந்திய அணி 37.3 ஓவர்களில் 187 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழக்க தடுமாற்றம் ஏற்பட்டது.


எனினும் யுவராஜ்சிங்குடன் இணைந்த சுரேஷ் ரெய்னா அற்புதமான இணைப்பாட்டத்தை வழங்கி ஆறுதலளித்தார்.

இந்த ஜோடி பிரெட் லீ, தைட் ஓவர்களில் அடுத்தடுத்து பவுண்டரிகளை விளாச இந்திய அணியின் பதற்றம் தணிந்தது.

### யுவராஜ் அபாரம்

இதில் யுவராஜ் சிங் 54 பந்துகளில் அரைச்சதம் பெற்றார். இந் நிலையில் இந்திய அணி 47.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 261 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன் மூலம் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறியது. எதிர்வரும் 30ஆம் திகதி மொகாலியில் நடைபெறும் 2ஆவது அரையிறுதியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.




துடுப்பாட்டத்தில் யுவராஜ்சிங் 65 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 57 ஓட்டங்களையும் சுரேஷ் ரெய்னா 28 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 34 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரெட் லீ, தைட், வோட்சன், டேவிட் ஹசி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

இப் போட்டியில் சகல துறையிலும் ஜொலித்து இந்திய அணியின் வெற்றி நாயகன் யூவராஜ்சிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

கடந்த 1999ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மூன்று முறை சம்பியனாகி உலகக்கிண்ண அரங்கில் ஆதிக்கம் செலுத்திவந்த அவுஸ்திரேலிய அணி இம்முறைகாலிறுதியுடன் அடங்கியது.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை
வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

இறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்
1. ..............................
2. ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொ.பே: ..............................
தே.அ.அ.இல: ..............................
சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி ?
இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான அரையிறுதி போட்டியில் வெற்றி பெறுவது யார்?
..............................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே.அ.அ.இல:- ..............................
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் பிரதான வீதிகளில் வேக கட்டுப்பாட்டுச் சமிக்ஞைகள் அவசியம்

## பொதுமக்கள் வலியுறுத்து

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் வாகன நெரிசல் அதிகமாக உள்ள பிரதான வீதிகளில் வீதி வேகக் கட்டுப்பாட்டு சமிக்ஞைகள் நிறுவப்பட வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரும்பாலான வீதிகளில் இவ்வாறான சமிக்ஞைகள் காணப்படுவதில்லை என்றும் இது நிறுவப்படும் பட்சத்தில் வீதி விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்.பருத்தித்துறை பிரதான வீதி புனரமைப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அதிகமான வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. வாகனங்களின் வேகம் அதிகமாகக் காணப்படுவதனாலேயே விபத்துகள் ஏற்பட்டு மரணங்கள் சம்பவிக்கின்றன.

இம்மரணங்களைத் தவிர்க்க வேகக் கட்டுப்பாட்டு சமிக்ஞை அவசியமெனவும் இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் நிறுவ வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4-10)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 10ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்; சிறப்பு விருந்தினராக யாழ்.பிரதேச செயலக கணக்காளர் வே.வேல்நிதி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கூட்டத்தில் புதிய அங்கத்தவர்களை இணைத்தல், அங்கத்துவ அட்டை பெறாதவர்களுக்கு அட்டை வழங்கல் என்பன இடம்பெறவுள்ளதாக செயலாளர் சு.கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கையடக்கத் தொலைபேசி பயிற்சி வகுப்பு

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரின் ஏற்பாட்டில் யா/பண்ணாகம், மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கையடக்கத் தொலைபேசி திருத்தப் பயிற்சி வகுப்புகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

எனவே, இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்பதற்கு விண்ணப்பங்களை வழங்கியவர்கள் தவறாது பங்குபற்றுமாறு யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஞானச்சுடர் வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியின் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மீகச் சஞ்சிகையான 'ஞானச்சுடர்' பங்குனி மாத இதழ் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வெளியிடப்படும்.

இந்நூலின் வெளியீட்டுரையை ஓய்வு பெற்ற அதிபர் வ.கணேசமூர்த்தியும் மதிப்பீட்டுரையை யா/ஸ்ரான்லி கல்லூரி ஆசிரியர் காரை எம்.பி.அருளானந்தமும் வழங்குவார்கள். (ஸ்ரீ-2-35)

# பஜனை நிகழ்வு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் பருத்தித்துறை சத்தியசாயி மன்றத்தினால் பஜனை நிகழ்வு நடாத்தப்படும். (ஸ்ரீ-2-35)

# வடமராட்சி வடக்கு பி.செ. பிரிவில் முதியோர் சங்கங்கள் அமைப்பு

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 22 கிராம அலுவலர் பிரிவுகளில் முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 13 கிராம சேவையாளர் பிரிவுகளில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, முதியோர் சங்கங்கள் அமைக்கப்படாத கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் உடனடியாகப் பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு முதியோர் சங்கங்களை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2-35)

# துவிச்சக்கரவண்டிகளை தவறவிட்டோர் கவனத்திற்கு

மானிப்பாய் பொலிஸாரால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் 9 துவிச்சக்கரவண்டிகள் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, துவிச்சக்கரவண்டிகளைத் தவறவிட்டோர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டிகளின் இலக்கங்கள் வருமாறு.

57173963, L101604, 23939027, L675791, 57193086, 57211392, 97201691, 67124115, 2475898. (ஸ்ரீ)

# குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் பரவிவரும் "நாய்குட்டான்" பாசி

## மீனவர்கள் பெரும் சிரமம்

குருநகர், பாஷையூர் மற்றும் கரையோரக் கடற்பகுதிகளில் "நாய் குட்டான்" என்னும் ஒருவகைப் பாசியால் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பாசிகள் வலைகளில் படிந்து பிரிக்க முடியாத அளவிற்கு அவ்வலைகளை இறுக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சுனாமி ஏற்பட்டதிலிருந்து யாழ்.மாவட்ட கடற்கரையோரங்களில் நாய் குட்டான் பாசி பரவ ஆரம்பித்துள்ளது. அதன் பெருக்கம் தற்போது அதிகரித்துள்ளதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-4-5)

# போக்குவரத்து விதிகளை மீறிய நபர்களுக்கு எதிராக வழக்கு

சாவகச்சேரியின் பல்வேறு இடங்களில் போக்குவரத்து விதிகளை மீறிய பத்து நபர்களுக்கு எதிராக சாவகச்சேரி மற்றும் கொடிகாமப் பொலிஸாரினால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பத்து நபர்களும் மன்றிற்கு சமூகம் தராததால் அழைப்புக் கட்டளை அனுப்புமாறு பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-4-29)

# மாணவர்களுக்கு பாதணிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினரால் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பாதணிகள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் கரித்தாஸ் கியூடெக் நிறுவன திட்ட முகாமையாளர் திருமதி ம.பதும சேகரி, உத்தியோகத்தர்களான அ.சுகந்தன், எஸ்.ஜி.பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பாதணிகளை வழங்கினர். (ஸ்ரீ-2)

# குளிர்த்தி அபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு குளிர்த்தி அபிஷேகம் சிறப்பாக நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4-10)

# இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு ஆயுர்வேத பாதுகாப்புச் சபையினால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் ஒன்று வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, உடுப்பிட்டி உப அலுவலகத்தில் வைத்து நடாத்தப்படவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் பொது வைத்தியம், பாலர் ரோகம், கொரியன் அக்குபஞ்சர் சிகிச்சையுடன் நீரிழிவு நோயிற்கான குருதி, சிறுநீரகப் பரிசோதனையும் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் துறைசார் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள் கலந்துகொள்ளவுள்ளதால் நோயாளர்கள் அனைவரும் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்கப்படுகிறார்கள். (ஸ்ரீ-2)


# மின்விசிறிகள் அன்பளிப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு புதிதாக 30 புதிய மின்விசிறிகளை வல்லிபுர ஆழ்வார் ஆலயம் வழங்கியுள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளுக்கு பயன்படுத்துவதற்கென கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கே.நந்தகுமாரிடம் மேற்படி மின்விசிறிகள் கையளிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-4-24)

யாழ்.செய்திகள்



யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் பாடசாலை அதிபர் ச.திரவியராசா தலைமை உரையாற்றுவதனையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் ஓய்வுபெற்ற பகுதித் தலைவர் எஸ்.சிவஞானசுந்தரம் வெற்றியீட்டிய மாணவரொருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அல்வாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் 'கிரிடா சக்தி' வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

மன்னார் மாவட்ட ரீதியாக மஹிந்த சிந்தனையின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் ஆலோசனைக்கமைய வடமாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிகழ்வான 'கிரிடா சக்தி' விளையாட்டு வேலைத்திட்டம் மன் னார் மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வேலைத்திட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகம் தலைமையில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் வடமாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் மாவட்டத்திலுள்ள விளையாட்டுத் துறை அதிகாரிகள், பயிற்சியாளர்கள், நிகழ்ச்சித் திட்ட அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்திற்கான தெரிவுகள் எதிர்வரும் 2 ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சியும் மாதக் கொடுப்பனவுகளும் வழங்கப் படவுள்ளன. (ஸ்ரீ-2)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் 15 1/2 கிலோ தங்கம் கொள்ளை

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து செட்டியார் தெரு வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான பதினைந்தரை கிலோ தங்கம் நேற்று கொள்ளையிடப்பட்டுள்ளது.

வெளிநாடொன்றிலிருந்து வர்த்தக நோக்கங்களுக்காக கொண்டு வந்த தங்கக் கட்டிகளே இவ்வாறு விமானத்தில் வைத்துக் கொள்ளையிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வர்த்தகர் கொண்டு வந்த தங்கக் கட்டிகள் அவர் பயணித்த விமானத்தின் சரக்குப் பகுதியில் வைத்து எடுத்து வரப்பட்டிருந்தது.

அவர் விமான நிலையத்தில் இறங்கி தங்கத்தைப் பொறுப்பெடுப்பதற்காக முயன்ற போது அது காணாமல் போயிருப்பது தெரிய வந்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இது வரை காலமும் நடைபெற்றுள்ள திருட்டுக்களில் இதுவே மிகப் பெரும் திருட்டுச் சம்பவமாகும். தங்கம் திருட்டுப் போயுள்ளமை தொடர்பாக விமான நிலையப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## திருவாவடுதுறையும் தோடியும்

சங்கீத வித்துவான்களில் பல வகையினர் உண்டு. சில குறிப்பிட்ட இராகங்களைப் பாடுவதால் அவர்களுக்குப் பெருமை வருவதுண்டு.

அந்தவகையில் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையால்தான் தோடி இராகத்துக்கே பெருமை வந்தது. தோடி இராகத்தை அவர் வாசித்துக் கேட்க வேண்டும் என்று சொல்வார்கள்.

பேராசிரியர் கல்கி ஒருமுறை தம்முடைய பத்திரிகையில் (கல்கி 21.05.1950) இல் எழுதினார். அதை அப்படியே தருகிறேன்.

''ஆஹா! ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் தோடி ஆலாபனையை முதன்முதலில் கேட்ட போது, நம்முடைய மனதில் என்னென்ன இன்பமயமான கற்பனைகள் எல்லாம் உதித்தன. குழந்தை தாயிடம் கொஞ்சும் குரலைக் கேட்டோம். ரதியும் மன்மதனும் பேசிக் கொண்ட காதல் மொழிகளைக் கேட்டோம். முருகன், சிவபெருமான் செவி குளிர மொழிந்த உபதேசத்தைக் கேட்டோம். கலைமகள் கவிஞனுக்கு அருளிய ஆசிமொழிகளைக் கேட்டோம். நாரத முனிவருடைய தம்புரா சுருதியைக் கேட்டோம். இராவணன் தன் எலும்பை ஒடித்து வீணையாகச் செய்து வாசித்த கானத்தைக் கேட்டோம். கானப் பறவைகளின் கலகல ஒலியைக் கேட்டோம்.''

இதுதான் பேராசிரியர் கல்கியின் விமர்சனம்.

டி.என்.ராஜரத்தினம்பிள்ளை இறந்து போனார்.

அப்பொழுது கவிஞர் கண்ணதாசன் எழுதினார்.

'செவியினில் ஓடி... எங்கள் சிந்தையில் ஓடி...
இந்த புவியெல்லாம் ஓடி...
நின்பாற் பொங்கிய 'தோடி'
வேறிங்கு எவரிடம் போகும்?
ஐயா! இனியதைக் காப்பார் யாவர்?
அவிந்த நின் சடலத்தோட
அவிந்தது 'தோடி' தானும்! என்று எழுதினார்.

அந்தளவுக்கு அவருடைய தோடியை இரசித்தவர்களுண்டு. அதேபோல் 'தோடி' என்றால் என்னவென்று தெரியாமலே அவரை இரசித்தவர்களும் அந்தக்காலத்தில் உண்டு.

ஒரு பெரிய சபையில் இவர் வாசித்துக் கொண்டிருந்தார். இடைநடுவில் ஒரு பெரிய மனிதர் உள்ளே வந்தார்.

உடம்பிலே பட்டு வேட்டி... ஜரிகை அங்கவஸ்திரம்... வாயில் வெற்றிலை... வாசனைப் புகையிலை... காதில் வைரக்கடுக்கன்... கழுத்தில் தங்கச் சங்கிலி... கை விரல் முழுவதும் மோதிரம்.

கையில் ஒரு வெள்ளி வெற்றிலைப் பெட்டி.

உதவிக்கு இருவர் பக்கத்தில்...

இப்படி இந்தக் கோலத்தில் முதல் வரிசையில் வந்து உட்கார்ந்தார்.

வித்துவான் வாசித்து முடிந்ததும்... இவர் அவரைப் பார்த்து, "நீங்க தோடி வாசிப்பதில் கெட்டிக்காரர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதைக் கேட்பதற்குத்தான் மினக்கட்டு வந்திருக்கிறேன். வாசிங்க" என்றார்.

ராஜரத்தினம்பிள்ளைக்கு ஒன்றும் புரியவில்லை. ஏனென்றால், இதுவரை அவர் அந்த தோடி இராகத்தைதான் விரிவாக வாசித்து முடித்திருந்தார்.

இவ்வளவும் கேட்டுவிட்டு இவர் இப்படி கேட்கிறாரே... என்று யோசித்தார்.

உடனே என்ன செய்தார் தெரியுமா?

பக்கத்தில் மிகவும் சாதுவாக சுருதி போட்டுக்கொண்டிருந்தவரின் முதுகில் ஓங்கி ஒரு குத்து விட்டார்.

அவர் அதிர்ச்சியில் இவரை நிமிர்ந்து பார்த்தார்.

ராஜரத்தினம்பிள்ளை சொன்னார்:

" ஏன் ஐயா...? ஐயா என்னுடைய பரமரசிகர்... தோடி இராகம் கேட்க வேண்டும் என்கிறார்.... நீ இந்தச் சமயம் பார்த்து தோடி இராகம் வாசிக்கிற நாதஸ்வரத்தை மறந்து போய் வீட்டிலேயே வைத்து விட்டு வந்து விட்டாயே. இப்ப ஐயாவுக்காக அந்த இராகத்தை நான் எப்படி வாசிக்கிறது?" என்று சொல்லிவிட்டு மறுபடியும் முதுகில் ஒரு அடி கொடுத்தாராம்.

அடி வாங்கியவருக்கே சிரிப்பை அடக்க முடியவில்லையாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கணனி மயப்படுத்தப்பட்ட புதிய அடையாள அட்டைகள் அறிமுகம்

புதிய விடயங்களை உள்ளடக்கிய கணனி மயப்படுத்தப்பட்ட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத்திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி புதிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக

## ஆட்பதிவு திணைக்களம் தெரிவிப்பு

ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது பாவனையில் உள்ள அடையாள அட்டைகளில் இருந்து மாறுபட்ட வகையில் புதிய அடையாள அட்டைகள் உருவாக்கப்படவுள்ளன.

புதிய அடையாள அட்டை கணனி மயப்படுத்தப்பட்டதாக உருவாக்கப்படும் என்றும் இதில் கை விரல் அடையாளம் உள்ளிட்ட பல்வேறு விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றும் திணைக்களம் மேலும் தெரிவிக்கின்றது. (ஸ்ரீ-2)

# அமெரிக்க முதலீட்டாளர்கள் இலங்கை வருவதில் சிக்கல்

மனித உரிமை மீறல்கள், போர் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி வருவதால் அமெரிக்க முதலீட்டாளர்கள் இலங்கைக்குக் கொண்டு வரும் தனது முயற்சிகள் தோல்வியடைந்து வருவதாக அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவம் உள்ள நாட்டிற்கு உதவி வழங்குவதை தடுக்கும் திருத்த சட்டம், போர் குற்றங்களை விசாரிக்குமாறு அமெரிக்க செனட் விடுத்துள்ள கோரிக்கை என்பன தடையாக அமைந்துள்ளன.

இலங்கையின் மிகப்பெரிய முதலீட்டாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் அமெரிக்கர்கள் ஆவர். அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள தடையேற்பட்டுள்ள போதிலும் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய அதிகமான பங்களிப்பை சீனாவே வழங்கி வருகிறது. (ஸ்ரீ-2)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்களுக்கு அபராதம்

(கரவெட்டி)

சாவகச்சேரி பிரதேசத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இச்சம்பவங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன. முதலாவது சம்பவத்தில் சாவகச்சேரி நகரப்பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்திய சாரதியைக் கைது செய்த சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். கணபதிப்பிள்ளை முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்தநபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டுமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

மற்றுமொரு சம்பவத்தில் பரந்தன் பகுதியைச் சேர்ந்த சாரதி மது போதையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டில் கொடிகாமப் பொலிஸாரினால் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 4 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த சாவகச்சேரி பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-4-24)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 90 | 100 | 100 | 160 |
| தக்காளி | 60-70 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 70-80 | 90 | 100 | 80 |
| கரட் | 100 | 200 | 200 | 100 |
| பூசணி | 50 | 60 | 70 | 60 |
| புடோல் | 50 | 80 | 100 | 90 |
| வாழைக்காய் | 50 | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 100 | 130 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 120 | -- |
| பயற்றங்காய் | 70 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 | 130 |
| பீற்றூட் | 50 | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | -- | 150 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 500 | 480 |
| போஞ்சி | 120 | 100 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60. | 50 |

# இராசி பலன்

*25.03.2011*
*(பங்குனி 11,வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு*
*சஷ்டி பிற்பகல் 12.42 மணிவரை*
*கேட்டை பின்னிரவு 2.20 மணிவரை*
*இராகுகாலம் 10.45-12.15 மணிவரை*
*சுப நேரம் 6.15-7.45 மணிவரை*

**மேடம்** கணபதி வழிபாட்டால் கவலைகள் தீர வேண்டிய நாள், இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள்.

**இடபம்** மகிழ்ச்சிக்குரிய செய்திகள் காலை நேரத்திலேயே கேட்கும் சூழ்நிலை உருவாகும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், தொழில் நன்மையுண்டு

**மிதுனம்** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், கூட்டுத் தொழிலில் எதிர்பாராத இலாபம் கிடைக்கலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட அச்சுறுத்தல் அகலும்.

**கடகம்** கல்வித் தேவைகளுக்காக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகலாம், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், பித்தம் சம்பந்தப்பட்ட ரோகம் ஏற்படலாம்.

**சிங்கம்** தாய்வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சியைத்தரும்.

**கன்னி** சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும், உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**துலாம்** விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பணவரவு திருப்திதரும், குடும்ப உறுப்பினரை அனுசரித்து செல்வது நல்லது, கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**தனுசு** பயணத்தால் பலன் கிடைக்கும், குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சயனசுகக் குறைவுண்டு.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தனவரவு திருப்திதரும், உறவினர் வருகையால் இன்பங்கள் கூடும், கௌரவமான நாள்.

**கும்பம்** தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தூரதேச செய்திகள் வந்து சேரும், எடுத்த காரியம் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், வரவேண்டிய வரவுகள் வந்து சேரும், பிரயாண நன்மையுண்டு, தந்தை வழி உறவினர்களால் உதவிகள் கிடைக்கலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாக எதிர்க்கட்சிகள் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில், ஆங்காங்கே சிறுசிறு சம்பவங்கள் நடைபெற்றதாகவும் இலங்கையில் தேர்தல் ஆரம்பிக்கப்பட்ட காலம்முதல் இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெற்று வருதாகவும் இவை தவிர்க்க முடியாதவை எனவும் கூறினார்.

தேர்தல் நடைபெற்ற 234 மன்றங்களில் 213 இடங்களை எமது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியுள்ளது.

வாக்களிக்க அடையாள அட்டை அவசியம் என்ற சட்டம் உள்ளதால் வாக்கு மோசடிகள் இடம்பெறவில்லை. எதிர்க்கட்சிகளின் போலியான குற்றச்சாட்டுக்களை அரசு பொருட்படுத்தவில்லை என்றும் அமைச்சர் கூறினார். (ஸ்ரீ-2)

# ராகம வைத்தியசாலைக்கு 46 கோடி ரூபா அன்பளிப்பு

## கோடீஸ்வரப் பெண்மணியொருவர் வழங்கினார்

கோடீஸ்வரப் பெண்மணி ஒருவர் பெருமளவிலான தொகையொன்றை அரச வைத்தியசாலை ஒன்றுக்கு நன்கொடை யாக வழங்கியுள்ளார்.

கடவத்தை மகரவில் வசிக்கும் மாலனி ஆரியரத்ன என்ற கோடீஸ்வரப் பெண்மணி 46 கோடி ரூபா பெறுமதியான காணி, வீடு மற்றும் கட்டடங்கள் அடங்கலான சொத்துக்களை ராகம போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

குறித்த பெண்மணி நன்கொடை சொத்துக்களுக்கான உறுதிப் பத்திரங்களை சுகாதார அமைச்சில் வைத்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

இலங்கையில் செல்வந்தர்களால் அரச வைத்தியசாலை ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ள அன்பளிப்புக்களில் ஆகக் கூடிய நன்கொடை இதுவென சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இப்பெண்மணி ராகம போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் சிகிச்சை பெறச் சென்றிருந்த சமயம், அவ்வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஜி.விஜேசூரியவை சந்தித்து தம்மிடம் இருக்கும் 46 கோடி ரூபா பெறுமதியான காணி, வீடு மற்றும் கட்டடங்கள் அடங்கலான சகல சொத்துக்களையும் இந்த வைத்தியசாலைக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாக கூறியுள்ளார். அதற்கேற்பவே அவர் இதனை வழங்கியுள்ளார். (ஸ்ரீ-2)

# பிரிட்டன் மாணவர் விசா தொடர்பில் புதிய நடைமுறை

## ஏப்ரல் முதல் அமுல்

பிரிட்டன் மாணவர் விசா தொடர்பிலான புதிய நடைமுறை ஏப்ரல் முதல் அமுலுக்கு வருவதாக கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் அறிவிக்கின்றது.

மாணவர்களாக பிரிட்டனுக்கு செல்ல விரும்புகின்றவர்கள் நடைமுறைக்கு வருகின்ற புதிய விசா விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்த புதிய நடைமுறைகளால் ஏற்கனவே மாணவர் விசா பெற்றுக் கொண்டவர்களுக்கு ஒரு பாதிப்பும் ஏற்படாது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த புதிய நடைமுறைகளின்படி மாணவர்களின் கல்வித்திட்ட நிலைமைக்கமைய அவர்கள் பகுதிநேர வேலை செய்யும் நேரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆறு மாதங்களுக்கு குறைந்தகால படிப்பை மேற்கொள்ளவுள்ள மாணவர்கள் தம்மில் சார்ந்துள்ளவர்களை பிரிட்டனுக்கு அழைத்துச் செல்ல முடியாது.

அத்துடன், பல்கலைக்கழக பட்டம் அல்லது அடிப்படை நிலைக்கு கீழான படிப்பைப் படிக்கச் செல்பவர்கள் பிரிட்டனில் பகுதிநேர வேலையை பெறுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஆங்கில அறிவும் திருப்திகரமானதாக இருக்க வேண்டும் என இப்புதிய நடைமுறையில் எதிர்பார்க்கப்படுகிறது. இப்புதிய நடைமுறை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி நடைமுறைக்கு வருமென மேலும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் புலன் விசாரணைகள்

இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களைப் புலன் விசாரணைக்குட்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன் முதற்கட்டமாக இலங்கையின் சமாதான சபை எனப்படும் சாம மண்டலய எனும் அரச சார்பற்ற நிறுவனம் இரகசியப் பொலிஸாரின் தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் செயற்படும் சந்தேகத்துக்கிடமான முறையில் நடவடிக்கைகளைக் கொண்ட அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் எதிர்காலத்தில் அவ்வாறான பரிசோதனைக்குட்படுத்தப்படும் என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அதற்காக இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட இடையூறு விதிக்கப்படுவதாக அர்த்தம் கற்பித்துக் கொள்ளக் கூடாது என்றும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# அறுவைச் சிகிச்சையினால் புதியமுகம் உருவாக்கி மருத்துவர்கள் சாதனை

அமெரிக்க வரலாற்றில் முதல் முறையாக விபத்தில் முகம் சிதைந்த இளைஞருக்கு முழுமையான முகமாற்று அறுவை சிகிச்சை செய்து மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். அமெரிக்காவை சேர்ந்தவர் தல்லாஸ் வீன்ஸ் (வயது 25). கட்டட தொழிலாளியான இவர் 2008 இல் ஒரு கட்டடத்தில் பணியாற்றினார்.

அப்போது அவரது ஏணி மின்கம்பத்தின் மீது சாய்ந்து மின்சாரத் தாக்குதலுக்கு ஆளானார். அதில் வீன்ஸின் முகம் முழுவதும் சிதைந்தது. ஒருபகுதி கன்னத்தைதவிர கண்கள், மூக்கு, வாய், நெற்றி அனைத்தும் உருகி விட்டன.

அவருக்கு பாஸ்டன் நகரின் பிரிகாம் மருத்துவமனையில் 30 பேர் அடங்கிய மருத்துவர் குழாம் கடந்த வாரத்தில் முழுமையான முகமாற்று அறுவை சிகிச்சை செய்தது. 15 மணி நேரம் நீடித்த அறுவை சிகிச்சையில், வீன்சின் முகத்தில் மூக்கு, வாய், உதடுகள், நெற்றி, கன்னங்கள் பொருத்தப்பட்டன. மருத்துவசோதனைக்கு உடலை அர்ப்பணித்திருந்தவர்களிடம் இருந்து இந்த உறுப்புகள் பயன்படுத்தப்பட்டன.



விபத்திற்கு முன்...

விபத்திற்கு பின்...

இந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக அமைந்ததாக மருத்துவமனை தலைவர் பெஸ்டி நாபல் தெரிவித்தார். எனினும் வீன்சின் கண் நரம்புகள் முற்றிலும் சேதமடைந்து விட்டதால் பார்வையை மட்டும் மீட்க முடியவில்லை. அத்துடன், ஒரு பக்க கன்னத்தில் தொடுஉணர்வையும்திரும்பப்பெறஇயலவில்லை. எனினும் அவரால் இப்போது பேச முடிகிறது. அறுவை சிகிச்சைக்கு பின்னர் குடும்பத்தினருடன் தொலைபேசியில் வீன்ஸ் பேசியதாக பெஸ்டி தெரிவித்தார்.

இது பற்றி மருத்துவர் குழாமின் தலைவர் போதன் பமாக் கூறுகையில், வீன்சுக்கு இனி பெரிய அளவிலான சிக்கல்கள் ஏதுமில்லை. அவர் நல்ல உடல்நிலையுடன் இருக்கிறார். இது மருத்துவ முன்னேற்றத்தில் மேலும் ஒரு மைல்கல் என்றார். இந்த மாரத்தான் அறுவை சிகிச்சைக்கான செலவை அமெரிக்க இராணுவத்துறை ஏற்றது.

போர்களில் வீரர்களுக்கு ஏற்படும் உடல் சேதங்களை சரி செய்வதற்கான ஆராய்ச்சிக்காக இதுபோன்ற 5 அறுவை சிகிச்சைகளுக்கு இராணுவம் ரூ. 15.3 கோடி செலவிடுகிறது. அதிலிருந்து இந்த அறுவை சிகிச்சை செலவு ஏற்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலை கள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 தொடக்கம் மாலை 5 மணி வரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கை- தீவு, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், வடமராட்சி பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2) ,

# கொழும்பின் ஐந்து உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைத்து நகர அபிவிருத்தி கூட்டுத்தாபனம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைத்து நகர அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ஒன்றை உருவாக்க அமைச்சரவையின் அங்கீகாரம் நேற்று முன்தினம் இரவு கிடைத்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் கொழும்பு மக்கள் தங்கள் பிரதேசத்துக்கான உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பு அதன் மூலம் அரசாங்கத்தினால் பறித்தெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் உள்ளூராட்சி மன்றங்களில் அரசாங்கம் ஒருபோதும் வெற்றியை ஈட்ட முடியாது என்பதன் காரணமாகவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


அதன் காரணமாக, எதிர்வரும் காலங்களில் அப்பிரதேச மக்கள் இராணுவக் கட்டுப்பாடுகளையொத்த சட்டதிட்டங்களின் கீழ் வாழ வேண்டிய நிலையேற்படலாம்.

அத்துடன் அரசாங்கம் தமக்கு நினைத்த நேரத்தில் அப்பகுதியில் இருக்கும் மக்களை அப்புறப்படுத்தவோ, வீடுகளை இடித்துத் தள்ளவோ பிரஸ்தாப நகர அபிவிருத்தி கூட்டுத்தாபனசட்டமூலம்வழிவகுக்கும். அதன்மூலம்பொது மக்களின் அனைத்து வித சுதந்திரங்களும் பாதிக்கப்படும்.

பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தீர்மானத்துக்கு அமைவாகவே பிரஸ்தாப சட்டமூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் அ.சா. அரியகுமார் மற்றும் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட ஹாட்லிக் கல்லூரியின் பகுதித் தலைவர் பா.ஜெயகோபால், வலிகாமப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், பாரியார் திருமதி புஸ்பகுமாரி புஸ்பலிங்கம் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினரான சி.புஸ்பலிங்கம் ஒலிம்பிக் தீபத்தை விளையாட்டுத் தலைவரிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-அல்வாய் செய்தியாளர்)*

# குற்றவியல் மற்றும் தண்டனை சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

குற்றவியல் மற்றும் தண்டனைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரனைகள் தாமதமடைவதைத் தவிர்ப்பதற்காக குற்றவியல் சட்டத்திலும் சிறைச்சாலைகளில் காணப்படும் இடநெரிசலை குறைப்பதற்காக தண்டனைச் சட்டத்திலும் திருத்தம் கொண்டுவர நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதன்மூலம் தகுதியற்ற தண்டனைகளைக் குறைக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வாய்மூல விடைக்காக ரஜீவ் விஜேசிங்க எம்.பி. நீதி அமைச்சரிடம் கேட்டிருந்த கேள்விக்கு நீதி அமைச்சர் சார்பாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இதனைத்தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்ட வேலைத்திட்டங்கள்

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத்திட்டத்தில் அரச, தனியார் அலுவலகங்கள்,முன்பள்ளிகள், வீடுகள், கோயில்கள், ஆகியவற்றை சிரமதானம் மூலம் சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவினர், மாவட்ட சுகாதார அதிகாரி பணிமனையினர் மற்றும் பொலிஸாரும் இராணுவத்தினரும் சனசமூக நிலையப் பிரதிநிதிகளும் பொதுமக்களுடன் இணைந்து செயலாற்றவுள்ளனர்.

எனவே, பொதுமக்களும் பொதுசனப் பிரதிநிதிகளும் இவ்வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நகராட்சிமன்ற செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-29)

# க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள்

**யா/ அத்தியார் இந்துக் கல்லூரி**

த.தபீந்திரன்- (8ஏ.பி), த.டினூஜன்- (5 ஏ, 3எஸ்), ஜெ.ஜெயகீர்த்தன்-(4 ஏ, பி), தே. சந்துரு- (4ஏ,பி,3சி,எஸ்), பே.டிவாகரன்-(3ஏ,2பி, 3சி, எஸ்), தி.ஜெகன்- (3ஏ, 3பி), க.கயல் விழி-(3ஏ, பி,சி,3எஸ்), ந.பவிதா-(3ஏ,பி,4சி,எஸ்), சி.சஞ்சீவன்-(2ஏ,பி,4சி, எஸ்), ந.மிருசா-(2ஏ,பி,3சி, 3எஸ்), க.தர்ஷந்தினி-(2ஏ,பி,2சி, 3எஸ்).

**யா/வல்லை சிவகுரு வித்தியாசாலை**

ஞா.வசந்தகுமார்-(2ஏ,2பி,3சி,2எஸ்), ர.குகன்(2ஏ,பி,2சி,3எஸ்), வி.பவிதா (2ஏ, 2சி,5எஸ்), வி.வினோதா (ஏ,2பி,3சி,எஸ்), பி.திவ்யா (ஏ,2பி,2சி,4எஸ்), செ.தமிழரசன் (ஏ,பி,2சி,3எஸ்).

**யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்**

கே.நிரூபா- (7ஏ,பி,சி,எஸ்), ப.பிரசாத்-(5ஏ,2பி, சி, எஸ்), ப.பிரசாத் (5ஏ, 2பி, சி, எஸ்), எஸ்.துவாரகன்-(5ஏ, 2 பி, சி, எஸ்), கே. நிரூசன்-(5 ஏ, பி, 2சி,எஸ்), எஸ்.விதுசா-(4ஏ, பி, 3சி எஸ்), எஸ். ஜீவன்யா-(4ஏ, பி,3சி,எஸ்), ரி. கோகிலன் (3ஏ, பி,4சி,எஸ்), கே.வசித்திரா (3ஏ, பி, 4சி,எஸ்), ஆர். டிசாந் (3ஏ, 5சி,எஸ்),

**யா/ ஹாட்லிக் கல்லூரி**

*தமிழ் மொழி மூலம்*

கீர்த்தனன்- (9ஏ),த.திவாகர்(9ஏ), க. நிதுசன்-(8ஏ,பி), சு.துளசிதாசன்-(8ஏ,எஸ்), ச.பரணிதரன்-(8ஏ,பி).சி.சிவதர்சன்- (7ஏ,2பி), ச.சுகசன் -(7ஏ, பி,சி), சி.தினேஷ்-(7ஏ,2சி), அ.கிருஷ்ணராகவன்-(7ஏ,பி,சி), கு.கௌரிசங்கர் -(6ஏ,2பி,சி), சு.பிரதாப்-(6ஏ, 2பி,சி), இ. கஜனன்-(6ஏ,3பி),ச.நிர்மலராஜா - (6ஏ, 2பி,சி),சா.தனுசன்-(6ஏ,3பி),ஜெ.சிந்துஜன்-(6ஏ,2பி,சி)

*ஆங்கில மொழி மூலம்*

சி. நிதுர்சன் -(9ஏ), ச. திவாகர்-(9ஏ), கா.கிரிதரன் - (8ஏ,பி), ச.கௌரிசங்கர் - (8ஏ, சி), ஜெ.ஜெசிந்தன்- (7ஏ, 2பி), சி.ரூபின் பிரகாஷ்-(7ஏ, 2பி), தி.சுதாகரன்- (7ஏ, பி, சி), வை. கோபிநாத்-(6ஏ, 2பி, சி), சி.கிருஷ்ணபிரதாப் -(6ஏ, பி, 2சி). (ஸ்ரீ)

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 30 ஆயிரத்து 124 முறைப்பாடுகள்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் உரிமை மீறல் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 1929 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு இதுவரையில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதுவரையில் 30 ஆயிரத்து 124 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளை பட்டியலிட்டு விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவதாக சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பாதுகாப்பற்ற முறையில் காணப்படுகின்ற சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை விரைவில் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வாசகர்களுக்கான போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அண்மையில் நடாத்தப்பட்ட "ஞானச்சுடர்" வாசகர்களுக்கான போட்டியில் பரிசு பெற்றோருக்கான பெயர்கள் வெளியாகியுள்ளன. இவர்களுக்கான பரிசுகள் இன்று வெள்ளிக்கிழமை பங்குனி மாத "ஞானச்சுடர்" வெளியீட்டின் போது வழங்கப்படவுள்ளதாக ஆச்சிரம சுவாமிகள் தெரிவித்துள்ளனர்.(ஸ்ரீ-2-35)

# துமிந்த சில்வா எம்.பி.க்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு வாபஸ்

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இரண்டு நபர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்ததாக அவருக்கெதிராக தொடரப்பட்டிருந்த வழக்கை சட்டமா அதிபர் நேற்று வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதத்தில் அவர் தன் அடியாட்களுடன் வந்து கொழும்பின் பம்பலப்பிட்டியில் இரண்டு நபர்களைக் கடத்திக் சென்று சித்திரவதை செய்ததாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. வழக்கின் சாட்சிகளாக 14 பேர் பெயரிடப்பட்டிருந்ததுடன் முக்கியமான தடயப் பொருட்கள் இர்ண்டும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அத்துடன் கடந்த ஏழு வருடங்களுக்கும் மேலாக வழக்கு தீவிரமாக விசாரிக்கப்பட்டு வந்ததுடன் குற்றம் சாட்டப்பட்டிருந்த துமிந்த சில்வாவும் பெருந்தொகையான பணம் மற்றும் சரீரப் பிணையிலேயே விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவ்வாறான நிலையில் நேற்று அவருக்கெதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கை வாபஸ் பெறுவதாக சட்ட மா அதிபர் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார்.


அதன் காரணமாக கொழும்பு மேல் நீதிமன்றம் துமிந்த சில்வாவை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்துள்ளது. அரசாங்கத்துக்கு ஆதரவான நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழங்குகள் அண்மைக்காலமாக வாபஸ் பெறப்படும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றமைக்கு இது இன்னோர் உதாரணம் மட்டுமே. அத்துடன் துமிந்த சில்வா பாதுகாப்பமைச்சின் மேற்பார்வை பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# நீங்காத நினைவலைகள்

**2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 18 05 1949

உதிர்வு 18 03 2009



அமரர் திரு வயிரமுத்து வாரித்தம்பி

**28ஆம் ஆண்டு நினைவு**

மலர்வு 02 07 1955

உதிர்வு 05 06 1982



அமரர் திருமதி வாரித்தம்பி தவராணி

**திதி: 2011.03.25 (ஸப்தமி)**

*எமது தந்தையாரின் 2ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு 2011.03.25 (வெள்ளிக்கிழமை) இன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

யோகேஸ்வீதி, ஆதியவளை, தாளையடி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4220)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

16

## காசநோயிற்கான சிகிச்சை

7. மருந்துகள் நோயாளி எடுத்தபின்; சிகிச்சை அட்டையில் பதியப்படும்.

8. நோயாளி மருந்து எடுக்க ஒரு நாள் வரத் தவறினாற்கூட உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். நோயாளியின் வீட்டிற்கு அருகில் வசிக்கும் சுகாதார உத்தியோகத்தர்கள் மூலம் அல்லது சுகாதாரத் தொண்டர்கள் மூலம் உடனடியாக அவர்களை மீள வரவழைத்து மருந்துகளைக் கொடுக்கலாம்.

9. 3 நாட்களுக்குமேல் நோயாளியைக் கண்டுபிடிக்க முடியாவிடின், அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் பணி மனைக்கும், மாவட்ட காசநோய்த் தடுப்புப் பணி மனைக்கும் அறிவிக்கவும்.

10. பொதுச்சுகாதார பரிசோதகர் உடனடியாக மருந்து எடுக்கத் தவறியவர்களைக் கண்டறிய நடவடிக்கை எடுப்பர்.

11. மருந்து எடுப்பவரின் கண் மஞ்சள் நிறமானால்; வாந்தி அதிகம் எடுத்தால்; தோலில் அதிகம் 'கடி' ஏற்படின், அவர்களை மாவட்ட மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பவேண்டும்.

12. ஒவ்வொரு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும், குடும்ப நலமாதுக்களும், தங்கள் பிரதேச வரைபடத்தில் காசநோயாளர் இனங்காணப்படின், சிவப்பு நிறத்தில் அடையாளப்படுத்தி வைக்கவும்.

13. காசநோய் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட பின்,சிவப்பு நிறம் அகற்றப்படும். இதனை அப்பிரதேசச் செயற்பாட்டின் பின்னூட்டலாகக் கருதலாம்.

**12.3.2 சமூக மாற்றத்தினை ஏற்படுத்தலில், குழுக்களிற்கான மையப்படுத்திய கலந்துரையாடலில் இடம்பெற வேண்டியவை:**

★ காசநோய் ஏற்படுவது பற்றிக் கலந்துரையாடல் வேண்டும்.

★ நோய் அறிகுறிகள் பற்றிக் கலந்துரையாட வேண்டும்.

★ இரண்டு கிழமைகளுக்குமேல் தொடர்ச்சியான இருமல் இருப்பின் சளிப்பரிசோதனை செய்தல்வேண்டும்.

★ காசநோய் முற்றாகக் குணப்படுத்தப் படக்கூடியது எனக்கூறல் வேண்டும்.

★ காசநோய் அறிகுறி உள்ளவர்களை இனம்காண உதவுதல் வேண்டும்.

★ காசநோய்க்குச் சிகிச்சை வழங்கும் இடங்களைக் கூறல் வேண்டும்.

**காசநோயாளிகள் இனங்காணப்படும் போது ஆற்றுப்படுத்த வேண்டியவை:**

★ காசநோய் அறிகுறி உடையவர்கள் குறிப்பாக இரண்டு கிழமைகளுக்குமேல் இருமல் உடையவர்கள்,சளிப் பரிசோதனைக்கு உட்படல் அவசியம் என்பதனைக் கூறல் வேண்டும்.

★ காசநோய் சாதாரண நோய் போல் குணப்படுத்தக்கூடியது எனக் கூற வேண்டும்.

★ தொடர்ச்சியாக மருந்து எடுத்தலின் முக்கியத்துவத்தினைக் கூறுதல் வேண்டும்.

★ காசநோய் தொடர்பான சமூக வடுக்கள் பொய்யானவை எனக் கூறல் வேண்டும்.

★ நோயினை ஏற்றுக்கொள்ளலைத் தவிர்ப்பதை தடுத்தல் வேண்டும்.

★ குடும்ப அங்கத்தவர்கள் சளிப்பரிசோதனைக்கு உட்படலை ஊக்குவித்தல் வேண்டும்.

★ நோயிற்குச் சிகிச்சை எடுத்தலில் உள்ள தடங்கல்களை எதிர்கொள்ள உதவுதல் வேண்டும்.

★ நோயாளியிலும், குடும்பத்தினரிலும் ஏற்படும் உணர்வு மாற்றங்களைச் சாதகமாக மாற்றல் வேண்டும்

★ குடும்ப உறுப்பினர்களுக்கு உளவளத் துணை செய்தல்வேண்டும்.

★ வேலை செய்யும் இடத்தில் உளவளத் துணை செய்தல் அவசியம்.

**காச நோயாளருடன் உள்ளவர்களுக்கான விழிப்புணர்வு**

யார் யார் மருந்தினை எடுக்கமாட்டார்கள் என்று எதிர்வுகூற முடியாதாகையால், மருந்து விழுங்குவதை நேரடியாக அவதானித்துச் சரியான மருந்துகளைச் சரியான நேரத்தில், சரியான அளவில் வழங்கப்படல் வேண்டும்.

நோய்க்குச் சிகிச்சை அளித்தல் இரண்டு நோக்கங்களை உடையது. முதலாவது நோயாளியைக் குணமடையச் செய்வது. இரண்டாவது மற்றையவர்களுக்கு தொற்று ஏற்படாது தடுத்தல். மதுபானம் பாவிப்போர் மனநோயாளிகளில் காசநாய் ஏற்படின் கட்டாய மேற்பார்வையுடன் சிகிச்சை அவசியம். *காசநோய் பரம்பரை நோயல்ல, ஆனால் நோய்க்கிருமிகள் குடும்ப அங்கத்தவர்களில் இலகுவில் தொற்றிக் கொள்ளும்.*

காசநோய் காற்றால் பரவுவது. இருமல், தும்மல் மூலம்பரவும். எனவே வாய், மூக்குப் பகுதிக்குக் கவசம் அணிந்து நோயாளியினை அணுகுவதால் தொற்றலை தவிர்க்கலாம். மருந்துகள் கொடுத்து இரண்டு கிழமைகளில் நோய்க் தொற்றல் குறைந்து விடும்.

காசநோய் தொற்றிவிடும் என்ற பயம் காரணமாக, நோயாளிகளையும் காசநோய். வைத்தியசாலையையும் புறம் தள்ளும் மனப்பாங்கு எம்மக்களிடம் இருக்கிறது. ஆனால் எம்மில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு காசநோய்க்கிருமி உடலில் உள்ளது. எமக்கு உடல் பலவீனம் வரும் போது நோய் அறிகுறிகள் தென்படும். மேலும் நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதால் நோயில் இருந்து குணமடையச் செய்வதுடன், மற்றவர்களுக்கு தொற்றுவதையும் தவிர்க்கலாம்.

12.4 காசநோய்க் கட்டுப்பாட்டில் சுகாதார உத்தியோகத்தர்களது செயற்பாடு

காசநோய்க் கட்டுப்பாட்டில் காசநோயினைக் கட்டுப்படுத்தப் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

1. காசநோய் உள்ளவரென ஐயுறு வோரை அடையாளம் காணல்.
2. ஆய்வுகூட உதவியுடன் நோயாளிகளைக் கண்டறிதல்
3. நோயாளிகளைப் பதிவுசெய்தல்
4. சிகிச்சையினை அவதானித்தல்
5. பதிவுசெய்தலும், அறிக்கைசமர்ப்பித்தலும்
6. ஒழுங்காக மருந்துகளை விநியோ கித்தல்
7. மேற்பார்வை செய்தல்

அ.காசநோய் இருக்குமென ஐயுறுவோரினை அடையாளம் காணல்

1. காசநோயிருக்கும் என ஐயுறுவோரினைச் சரியாக அடையாளம் காணல் வேண் டும்.

2. அவர்களின் பெயர், முகவரி என்பவற்றினைப் பதிவு செய்தல் வேண்டும்.

3. காசநோய் இருக்கும் என ஐயுறு வோரில் சளிச்சோதனை செய்யப்படல் வேண்டும். அல்லது மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்திற்கு அனுப்புதல் வேண்டும். (தொடரும்)

# கதிர்வீச்சுத்தாக்கம் குறித்து அச்சமடைய தேவையில்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சகல உணவுப் பொருட்களும் இறக்குமதி நுழைவாயில்களில் கதிர்வீச்சு சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை, ஜப்பானிலிருந்து அதிகளவு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதில்லை. ஆனால் அதன் அண்டை நாடுகளிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் சகல பொருட்களும் துறைமுகத்தில் உரிய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இவற்றின் மாதிரிகள் தேசிய அணுசக்தி அதிகார சபைக்கும் மேலதிக சோதனைகளுக்காக அனுப்பப்படுகின்றன.

அணுசக்தி அதகார சபையின் அனுமதிப் பத்திரம் கிடைத்த பின்பே உணவுப் பொருட்கள் வெளியில் அனுப்பப்படுகின்றன. சுகாதார அமைச்சின் உணவுப் பரிசோதர்கள் இந்த நடைமுறையை அமுல் செய்து வருகின்றனர். இதுவரை கதிர் வீச்சுத் தாக்கம் கொண்ட எந்த உணவுப் பொருட்களும் கண்டு பிடிக்கப்படவில்லை.

ஜப்பானில் இருந்து திரும்பி வருகின்றவர்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப் படு கின்றனர். ஒருவர் கதிர்வீச்சுத் தாக்கத்துக்கு ஆளானால் அவரால் மற்றவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. எனவே தற்போதைய நிலைமைகள் குறித்து மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)




சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் ஜே/74 கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் உரையாற்றுவதையும் அருகில் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் ம.கியூமன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# அம்பாந்தோட்டை துறைமுகம் முழுமையாக இயங்குவதற்கு கால அவகாசம் தேவை

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பணிகள் முடிவடைந்து வருகின்ற போதும் அது முழுமையாக இயங்குவதற்கு கால அவகாசம் தேவை என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



அம்பாந்தோட்டை துறைமுகம் திறக்கப் பட்ட பின்னர் அங்கு எந்த கப்பல்களும் வரவில்லை என ஐ.தே.க.தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வழங்கும் போதே ஹக்கீம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிறுவனங்களுக்கு இடையிலான போட்டிகளின் அடிப்படையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயற்றிறனை அதிகரிக்க முடியும். இந்தியாவில் உள்ள கேரளா துறைமுகம் 12ஆயிரம் டொலர்களை சேவை நிதியாக அறவிடுகின்றது. ஆனால் நாம் 4 ஆயிரம் டொலர்களையே அறவிடத்திட்டமிட்டுள்ளோம். அதன் மூலம் அதிக கப்பல்களை அம்பாந்தோட்டைக்கு வரவழைக்க முடியும்.

சிங்கப்பூர் துறைமுகத்துடன் ஒப்பிடும் போதும் அம்பாந்தோட்டை துறைமுகம் மிகவும் மலிவான சேவைகளை வழங்கும் திறன் கொண்டது என தெரிவித்துள்ளார்.

இதனிடையே அம்பாந்தோட்டை முறைமுகத்திற்கு செல்லும் கப்பல்களுக்கான காப்புறுதி வழங்க உலகின் முன்னணி காப்புறுதி நிறுவனமான லொயிட்ஸ் நிறுவனம் மறுப்பு தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு கம்பன் கழகத்தின் பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் யாழில்

கொழும்பு கம்பன் கழகத்தினால் இவ்வாண்டு கம்பன் விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் அமரர் துரை விஸ்வநாதன் நினைவு பேச்சுப் போட்டிகளும் அமரர் பொன் பால சுந்தரம் நினைவு கவிதைப் போட்டிகளும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இம்முறை யாழ்ப்பாணத்திலிருந்து அதிகளவு போட்டியாளர்கள் விண்ணப்பித்திருப்பதால் அவர்களுக்கான பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் இல 300, கோயில் வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

அத்துடன் கொழும்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிக்கான விண்ணப்பங்களைக் பத்திரிகைகள் மூலம் முன்னரே கோரப்பட்டிருந்தன. விண்ணப்பித்த போட்டியாளர்களுக்கான அனுமதியட்டைகள் போட்டியாளர்களின் முகவரிகளுக்கு தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே, போட்டியாளர்கள், அவ்வனுமதி அட்டைகளுடன் போட்டி மண்டபத்திற்கு குறித்த திகதியில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். போட்டிகளுக்கு விண்ணப்பித்தோர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடினும் தக்க சான்றுகளுடன் நேரடியாகப் போட்டி மண்டபத்திற்கு வருகை தரலாம் எனக் கொழும்பு கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

பேச்சு மற்றும் கவிதை போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கப் பரிசில்கள் வழங்கப்பெறும் என்றும் போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் கொழும்பு கம்பன் கழகம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## ஜனாதிபதி நிதியில் பாதணிகள் அன்பளிப்பு

(பூநகரி)

ஜனாதிபதி நிதியில் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நூறு மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இப்பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் பிரதி பிரதம செயலாளர் தி.இராஜநாயகம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பாதணிகளை வழங்கியிருந்தார். (ஸ்ரீ-4-84)

# சீனாவுடனான உறவுகளுக்கே இலங்கை அரசாங்கம் முன்னுரிமை

## அந்நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)


சீனாவுடனான உறவுகளுக்கே இலங்கை அரசாங்கமும் அதன் தலைவர்களும் முன்னுரிமை வழங்குவதாக சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

சீன பிரதி வெளிவிவகார அமைச்சர் ஸியான்க் ஸியூஜின்னை சீன வெளிவிவகார அமைச்சில் சந்தித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் அமுனுகம முக்கிய பங்காற்றினார் என சீன பிரதி வெளிவிவகார அமைச்சர் ஸியான்க் ஸியூஜின் தெரிவித்துள்ளார்.

அண்மைய ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப் பெற்று வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. கருணாதிலக்க அமுனுகம இதுவரை காலமும் சீனத் தூதுவராக கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேறு ஒரு பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் நோக்கில் அமுனுகம நாடு திரும்பும் போது சீனப்பிரதி வெளிவிவகார அமைச்சருக்கும் தூதுவருக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது. (ஸ்ரீ-2)



கோப்பாய் கோட்டம் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவிகளின் பாண்ட் வாத்திய சகிதம் யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன் கோட்ட அதிபர்களால் அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம். *(படம்:- கோப்பாய் செய்தியாளர்)*

# யுத்தத்தால் பாதிப்படைந்தோரின் வாழ்க்கை தரத்தை உயர்த்த 250 மில்.ரூபா ஒதுக்கீடு

## மீள்குடியேற்ற அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்துள்ளது.

கிராம சேவையாளர்களின் ஊடாக வாழ்வாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், குடிநீர் வசதி, உட்கட்டுமான வசதிகள், வீதி மற்றும் பாதை வசதி ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏனைய நாடுகளிடம் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

# கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் வாழ்வாதார உதவிகள்

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் பூநகரி நல்லூர் கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்த உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள 55 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் அதன் உதிரிப்பாகங்களும் வழங்கப்பட்டுள்ளதோடு வர்த்தகத்தில் ஈடுபடும் ஐந்து பயனாளிகளுக்கு தலா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வீதம் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கிராம சேவையாளர் எஸ். திருக்கேதீஸ்வரன், மேற்படி நிறுவனத்தால் கட்டங்கட்டமாக பல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றதெனவும் இவ் உதவிகளைத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதுடன் கருத்தாஸ் நிறுவனத்தினருக்கு பயன் பெற்ற மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கரித்தாஸ் கியூடெக் நிறுவன உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-84)

# எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கும் தமிழியல் விருது-2011

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கும் இவ்வாண்டுக்கான "தமிழியல் விருது" நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கவிஞர் பாண்டியூரான் தமிழியல் அரங்கில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு, கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், சிறப்பு விருந்தினர்களாகலண்டன்நிதிப் பணிப்பாளர் வவுனியூர் இரா. உதயணன், கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பணிப்பாளர் கவிஞர் சு.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக மட்டக்களப்பு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்வார். (ஸ்ரீ-2)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 10.01.1925

உதிர்வு 23.02.2011



மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் ஐயாத்துரை சிவசுவாமி ஐயா

(சங்கீத கலாபூஷணம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 25.03.2011 வெள்ளிக்கிழமை காலை 5.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி.

இங்ஙனம் இளைய மகள் குடும்பத்தினர்

(4203)

# காலாவதியான உணவுப் பொருட்களை விற்றோரிடமிருந்து தண்டப்பணம் அறவீடு

முழங்காவில், நாச்சிக்குடா பகுதிகளில் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் விற்பனை செய்யப்பட்ட உணவுவகைகள் இனங்காணப்பட்டன.

இதனையடுத்து மேற்படி உணவுகளை விற்பனை செய்த உணவகங்கள், வெதுப்பகங்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தினால் தண்டப் பணம் அறவிடப்பட்டதுடன் குறித்த கடைகளின் உரிமையாளர்கள் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர் என அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

அத்துடன் பூநகரிப் பகுதியில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் உணவகங்கள், வர்த்தகநிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இப்பொருட்களை விற்பனை செய்ய வேண்டாம் எனவும் பொருட்களை நுகர்வோர் காலாவதியான பொருட்களா என பார்த்து வாங்குமாறும் பொது சுகாதார பரிசோதகரால் அறிவித்தல் விடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொமர்ஷல் வங்கி மானிப்பாய் கிளையில் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருந்த மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான பரிசளிப்பு விழா அண்மையில் மானிப்பாய் கிளையில் முகாமையாளர் எஸ்.கே.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ரஜீவன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சிவநேசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மாணவியொருவருக்குப் பரிசில் வழங்கப்படுவதையும் பரிசில் பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

## புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளுடன் எரிக் சொல்ஹெய்ம் பேச்சுவார்த்தை

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் புலம் பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

சில தமிழ் புலம்பெயர் அமைப்புக்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக நோர்வே ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை தொடர்பான நோர்வேயின் நிலைப்பாடு மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக எரிக் சொல்ஹெய்ம் இந்தச் சந்திப்பினை நடத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடக்கு-கிழக்கை அபிவிருத்திசெய்வதற்கும் காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கும் புலம்பெயர் தமிழர்கள் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது மிகவும் அவசியமானது என நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்குத் துணைய புரியத் தயார் என அவர் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## கிளிநொச்சி வலயமட்ட உடற்பயிற்சி போட்டிகளில் வெற்றியீட்டியோர்

கிளிநொச்சி வலயமட்ட உடற்பயிற்சிப் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பிரதாப்சிங் விஷ்ணு தலைமையில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரி, பளை, கண்டாவளை, கரைச்சி கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த 13 குழுக்கள் பங்குபற்றின.

இப்போட்டியில் ஆண்களுக்கான பிரிவில் முதலாமிடத்தை இராமநாதன் மகா வித்தியாலயம், இரண்டாமிடத்தை தர்மபுரம் மகா வித்தியாலயம், கிளி.அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயம் என்பன பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை கிளி. வட்டக்கச்சி மகா வித்தியாலயமும் இரண்டாமிடத்தை கிளி.இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் மூன்றாமிடத்தை தர்மபுரம் மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

வலயமட்டத்தில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட குழுக்களும் மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றும் தகுதியினைப் பெற்றுள்ளதென உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-4-84)

## வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு மே 5 இல்

யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 19 உள்ளூராட்சி சபைகளுக்கான தனது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஆளும் கட்சி தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு மே மாதம் 5 ஆம் திகதி வழங்கப்படும் என உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

நீதிபதிகள் சத்ய ஹெட்டிகே. உபாலி அபேரட்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இரு தரப்பினரையும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமான வாதங்களை முன்வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்புமனுவில் கட்சியின் பெயர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு என தமிழில் குறிப்பிடப்பட்டிருந்தமையால் அவ்வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

அதற்கு எதிராக அக்கட்சியின் செயலாளரான அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். (ஸ்ரீ-2)

## கனடா வன்கூவரில் இயங்கிவந்த ஐ.நா. அலுவலகம் மூடப்பட்டது

### ஈழத்தமிழ் மக்கள் கடும் நெருக்கடியில்

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பான யு.என்.எச்.சி.ஆர். வன்கூவரில் உள்ள தனது கிளையை மூடியுள்ளதால் கனடாவுக்குச் சென்று அடைக்கலம் கோரிய தமிழ்மக்கள் மிகப்பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதாக கனடா தகவல்கள் தெரிவித்துள்ளன.

வன்கூவரிலுள்ள அலுவலகத்தை ஐக்கிய நாடுகள் சபை மூடியுள்ள அதேசமயம், கடந்த 18 மாதங்களில் அங்கு 2 கப்பல்களில் ஈழத்தமிழ் மக்கள் சென்றுள்ளனர்.

எனவே, இந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகள் கிடைப்பதில்லை என கனடா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஐ.நா. சந்தித்துள்ள நிதிப்பற்றாக்குறை காரணமாகவே வன்கூவரிலுள்ள தமது அலுவலகத்தை மூடியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான பிரதிநிதி அப்ரகாம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2007ஆம் ஆண்டு தமது அலுவலகம் மூடப்பட்டதாகவும் ஒட்டாவா மற்றும் ரொறன்ரோ ஆகிய பகுதிகளிலுள்ள அலுவலகங்கள் மூலம் அகதிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஐ.நா. அதிகாரிகள் வன்கூவர் பகுதிக்கு மூன்று மாதங்களுக்கொரு தடவை பயணங்களை மேற்கொண்டு வருவதாக ஐ.நா. அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 2011.03 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1655* - டைட்டான் என்ற சனிக்கோளின் மிகப்பெரிய சந்திரனை கிறிஸ்டியான் ஹைஜன்ஸ் கண்டுபிடித்தார்.

★ *1807* - அடிமைகளை வர்த்தகம் செய்வது ஐக்கிய இராச்சியத்தில் சட்டம் மூலம் தடை செய்யப்பட்டது.

★ *1821* - (ஜூலியன் நாள்காட்டி) ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக கிரேக்கர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். கிரேக்க விடுதலைப் போர் ஆரம்பமானது.

★ *1857* - பிரெஞ்சுக்காரரான லியோன் ஸ்கொட் ஒலியை பதிவு செய்யும் கருவிக்கான காப்புரிமம் பெற்றார்.

★ *1911* - நியூயோர்க் நகரில் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற தீயில் சிக்கி 146 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

★ *1918* - பெலாரஸ் மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

★ *1941* - இரண்டாம் உலகப் போர்: அச்சு அணி நாடுகள் அமைப்பில் யூகொஸ்லாவியா இணைந்தது.

★ *1947* - இலினோயில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 111 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1949* - எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகியவற்றைச் சேர்ந்த 92 ஆயிரம் பேர் சோவியத் அதிகாரிகளினால் சோவியத் ஒன்றியத்தின் பல ஒதுக்கமான இடங்களுக்கு கட்டாய வேலைக்காக அனுப்பப்பட்டனர்.

★ *1953* - ஆந்திர மாநில அமைப்பு பற்றிய அதிகாரப்பூர்வமான பிரகடனத்தை ஜவகர்லால் நேரு நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். ஆந்திரத் தலைநகர் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என அறிவித்தார்.

★ *1954* - முதலாவது வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை RCA நிறுவனம் வெளியிட்டது. (12" திரையளவு, விலை: 1,000 ரூபாய்)

★ *1957* - மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் லக்சம்பேர்க் ஆகியன இணைந்த ஐரோப்பிய பொருளாதார சமூகம் உருவாக்கப்பட்டது.

★ *1965* - மனித உரிமைவாதி மார்ட்டின் லூதர் கிங் தனது 4 நாள் 50 மைல் எதிப்புப் பயணத்தை முடித்துக் கொண்டார்.

★ *1971* - வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் கிழக்கு பாகிஸ்தானுக்கு எதிரான தேடுதலொளி நடவடிக்கையை ஆரம்பித்தது.

★ *1975* - சவுதி மன்னர் ஃபைசால் தனது மருமகனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ *1990* - நியூயோர்க் நகரில் சட்டமுரணான சமூக விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயில் சிக்கி 87 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1992* - சோவியத் விண்வெளிவீரர் செர்கே கிரிக்காலொவ் மீர் விண்வெளி நிலையத்தில் 10 மாதங்கள் தரித்திருந்துவிட்டு பூமி திரும்பினார்.

### பிறப்புகள்

★ *1914* - நோர்மன் போர்லாக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (இ. 2009)


### இறப்புகள்

★ *1914* - பிரெடெரிக் மிஸ்ட்ரால், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சுக் கவிஞர் (பி. 1830)

*1954ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி தொண்டைமானாற்றைச் சேர்ந்த உலக சாதனையாளர், நீச்சல் வீரர் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி 32 மைல் நீளமான பாக்குநீரிணையை (வல்வெட்டித்துறையிலிருந்து கோடிக்கரை வரையிலான தூரத்தை) 27 மணித்தியாலங்கள் 7 நிமிடங்களில் நீந்திக் கடந்து சாதனை படைத்தார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம் என்பது என்ன?



### குருடனின் வெளிச்சம்

ஆனந்தத்தை முதலில் நீங்களே உணரவில்லை என்றால், பிறகு எவ்வாறு மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளமுடியும்?

சரி, இப்போது நான் கனத்த இதயத்தோடு கதறி அழுது கொண்டே உங்களை ஆனந்தமாக மாற்றமுயன்றால் என்ன ஆகும்? மூன்றே நாட்களில் இந்த யோகமையம் ஒரு மரண வீட்டைப்போல் மாறிவிடும். இப்போது கூட நான் இங்கு செய்யும் வேலைகளால், என்னையே நான் அழித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அதை நான் ஆனந்தமாகச் செய்கிறேன்; இதை யாருக்கோ செய்யும் சேவையாக நான் கருதவில்லை. இது எனக்கு ஒரு சுமையல்ல! இங்கு செய்யப் படவேண்டிய காரியங்கள் நிறைய உள்ளதை நான் பார்க்கிறேன்; ஆகவே அவற்றைச் செய்து கொண்டும் இருக் கிறேன்... அவ்வளவுதான்!

நீங்கள் துயரப்பட்டுக் கொண்டு மற்றவர்களுக்கு ஆனந்தத்தைத் தருவதாக நினைப்பது மிகவும் மோசமான ஒன்று. யாருக்கு ஆனந்தத்தைத் தருவதாக நினைக்கிறீர்களோ? அவர்களுக்கு இது மேலும் மேலும் துயரத்தைத்தான் தரும். இதற்குப் பதில் நீங்கள் அவர்களுக்கென்று எதுவும் செய்யாமல் கூட இருந்து விடலாம்; அது மிகவும் நல்லது. அவர்கள் வாழ்க்கையை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

பல குடும்பங்களில் பெற்றோர்கள் இதைத்தான் செய்துகொண்டு இருக்கிறார்கள் "நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை; ஆனால் எங்கள் குழந்தைகள் சந்தோ ஷமாக இருக்க வேண்டும்" என்று கூறுகிறார்கள். தினந்தோறும் கஷ்டப் படுவது எப்படி என்று நீங்கள் வாழ்ந்து காட்டும்போது, உங்கள் குழந்தைக்கும் அந்த மனப்பாங்குதான் வரும். நீங்கள் முப்பது வயதில் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு நடந்தால், உங்கள் குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்லும்போதே முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு தான் நடப்பர்.

எதுவாக இருந்தாலும் இப்படித்தான்! நீங்கள் 18வயதில் புகைப்பிடித் தொடங்கினீர்கள். உங்கள் மகன் நீங்கள் புகைப்பதைப் பார்த்திருந்தால் அவன் 8வயதிலேயே அதைத் தொடங்கி விடுவான். எப்போதுமே அவர்கள் உங்களை விட ஒருபடி மேலேதான் இருப்பார்கள். பெரும்பாலும் அனைத்து விடயங்களையுமே ஒரு குழந்தை பெற்றோர்களைப் பார்த்துத்தான் கற்றுக்கொள்கிறது.

அதனால் புரிந்து கொள்ளுங்கள்... நீங்கள் ஆனந்தமாக வாழாமல், குழந்தைகளிடம் சந்தோஷமாக இருக்கச் சொன்னால், அதற்கு அர்த்தமே இல்லை. கண்பார்வை இழந்த ஒருவர் வெளிச்சத்தைப் பற்றிப் பேசுவது போலத்தான். வெளிச்சம் என்றால் என்னவென்றே தெரியாத அவர், அதை உருவாக்க முயன்றால் என்ன ஆகும்? இன்று இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு சத்தத்தை உருவாக்கி, 'இதுதான் வெளிச்சம்' என்று அவரிடம் சொன்னால், அவர் நம்பிவிடுவார் அதுபோல தான் மக்களும்.

ஆனந்தத்தை அவர்கள் அறியவில்லை; அது ஏதோவொரு வெளியுணர்வு என நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் திருமணவாழ்க்கையில் ஆனந்தத்தையே உணரவில்லை என்றாலும் கூட, தங்கள் குழந்தைகளுக்கு விருப்பமில்லை என்றாலும் கூட, அவர்களுக்குத் திருமணம் நடத்தி வைக்க எவ்வளவு தீவிரமாக இருக்கிறார்கள், பாருங்கள்?

ஏனென்றால் இவர்கள் திருமணம் என்றால் ஆனந்தம் என்று நம்பி விட்டார்கள். இது குருடன் சத்தத்தைப் போய் வெளிச்சம் என்று நம்புவது போலத்தான். உள்ளே இருக்கும் ஆனந்தத்தை அறியாதவனுக்கு உலகில் எது தான் ஆனந்தம்?

### அடிமைத்தனம்

மதுபானம் அருந்தினால் ஆனந்தமாக உணரும் மக்கள் பலர் இங்கு இருக்கிறார்கள். அதனால்தான் பலர் அதைக் குடிக்கிறார்கள். இந்த உண்மையை நீங்கள் ஏற்றுக்கொள் வது நல்லது.

வார விடுமுறை நாளன்று மது அருந்திவிட்டு சிறு ஆனந்தத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள். இதுவும் இல்லையென்றால் அவர்களுக்கு முழு வாரமும் பெரியசுமை தான். அல்லது தினமும் குடிக்கிறார்கள். நாள் முழுவதும் சுமை; மாலை நேரத்தில் மது அருந்தும் போது நன்றாக இருக்கிறது. இது அவர்கள் அனுபவத்தில் உண்மை... இதை யாரும் மறுக்க முடியாது, இல்லையா?

வாழ்வில் 'எப்போதாவது ஆனந்தமாக' இருப்பதிலிருந்து, ஆனந்தத்தின் ஊற்றாக நாம் மாறுவது எப்படியென்றுதான் பேசிக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால் யாருமே 24 மணி நேரமும் குடித்துக்கொண்டோ, ஆடிக்கொண்டோ, பாடிக்கொண்டோ இருக்க முடியாது. எந்தச் செயலையுமே 24 மணி நேரமும் செய்து கொண்டிருக்க முடியாது.

ஆனந்தம் என்பது உள் சூழ்நிலை. ஏதேனும் ஒரு செயலைச் செய்து இந்த ஆனந்தமான உள் சூழ்நிலையை நீங்கள் உருவாக்கினால் அந்த செயலுக்கு நீங்கள் அடிமையாகி விடுவீர்கள். அந்தச் செயலைச் செய்தால்தான் ஆனந்தமாக இருக்கலாம் என்ற நிர்ப்பந்தம் உருவாகிவிடும்.

உதாரணத்திற்கு ஓவியம் தீட்டுவதில் உங்களுக்கு ஆனந்தம் என்று வைத்துக் கொள்வோம். வாழ்வில் எதிர்பாராத விதமாக இனி ஓவியம் தீட்டமுடியாமல் போனால் நீங்கள் மிகவும் துயரமடைவீர்கள் இல்லையா? ஏன் இப்படித் துன்பமாக இருக்கிறீர்கள் என்று கேட்டால், "என்னால் ஓவியம் வரைய முடியவில்லை; அதனால் தான் துன்பமாக இருக்கிறேன்" என்று சொல்வீர்கள்.


இதுபோல எந்த ஒரு குறிப்பிட்ட செயலை செய்து, அதனால் ஆனந்தத்தை நீங்கள் உணர்ந்தாலும் அந்த செயலுக்கு நீங்கள் ஆழமாக அடிமைப் பட்டுப் போவீர்கள். இன்று பலரது நிலையும் இதுதான். ஆனந்தமாக இருக்க ஏதோ ஒரு செயலை கட்டாயம் செய்ய வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர்.இந்த அடிமைத்தனத்தை மாற்றாமல் ஆனந்தத்தை வாழ்வின் இயல்பாக உங்களால் உணரவே முடியாது.

ஆன்மீகம் 04

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இலங்கையில் தமிழியல் ஆய்வு: பண்பாடு

04



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட ஆய்வு வெளியீடாகிய சிந்தனையில் வெளியான கட்டுரைகள் பின்வருமாறு: செ. குணசிங்கம் "மத்தியகாலத் தமிழ்நாட்டு இந்துக் கோயில்கள்- தொழில் நிறுவனங்கள்" (1977), கலைவாணி இராமநாதன் "வரலாற்றுக்கு முற்பட்ட ஈழத்து இந்து மத நம்பிக்கைகள்" (1993), அ. சண்முகதாஸ் "யாழ்ப்பாணத்துச் சமய நடைமுறைகள்- சில பொதுக்குறிப்புகள்" (1985).

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

சமயம் தொடர்பாக இலங்கைச் சமயப் பெரியார் ஆறுமுகநாவலர் பற்றிய பெருந்தொகையான ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் 1964 க்குப்பின்னர் நூல்வடிவில் வந்தனவற்றை மட்டும் இங்கு தருகிறேன். இவற்றுட் காலத்தால் முந்தியது நா.ரா. நாச்சியப்பனின் "ஆறுமுகநாவலர் கதை" நூலாகும்.தொடர்ந்து வெளிவந்த நூல்கள் பின்வருமாறு: வி. முத்துக்குமாரசுவாமி (1965), பண்டிதமணி ச.கணபதிப்பிள்ளை "நாவலர்" (1968), "ஆறுமுக நாவலர் (1979), சொக்கன் நல்லைநகர் தந்த நாவலர்(1969),ச. தனஞ்சய ராஜசிங்கம் நாவலர் பணிகள்(1969), பொன்பாக்கியம் "நாவலர் சரித்திர ஆராய்ச்சி" (1970), ஏ. இராமதாசு( தொகுப்பாசிரியர்) நாவலர் நல்லுரைகள்(1973), பொ. பூலோகசிங்கம் "ஈழம் தந்த நாவலர் , நாவலர் பற்றிப் பல்வேறு நோக்கிலே செய்யப்பட்ட ஆய்வுகளின் தொகுப்பாக பேராசிரியர் க. கைலாசபதியாற் பதிப்பிக்கப்பட்ட நாவலர் நூற்றாண்டு மலர்(1979) இலங்கையின் பல ஆய்வாளர்களுடைய ஆக்கங்களைக் கொண்டுள்ளது. நாவலர் பற்றிய ஓரளவு முழுமையான ஆய்வுப்பேழை இதுவெனலாம். அ. சிவநேசச்செல்வனும் இ.கிருஷ்ணகுமாரும் இத்தொகுதிக்குத் தயாரித்த நூற்பட்டியல் மிக ஒழுங்கானதும் நிறைவானதுமாயுள்ளது. ஆய்வாளருக்குப்பெரிதும் உதவவல்லது.

### 2.1.2 கோயில்கள்

இலங்கைத் தமிழருடைய இந்துக் கோயில்கள் பற்றிய பெருமளவு ஆய்வு நோக்கிலே பல நூல்கள் வெளிவந்துள்ளன. இலங்கையின் புராதன சைவ ஆலயங்கள் என்ற தொடரில் முதலியார் குலசபாநாதன் "நல்லூர்க் கந்தசுவாமி" என்னும் தலைப்பில் ஒரு நூலை 1971ஆம் ஆண்டு வெளியிட்டார். நல்லூர் பற்றிய ஆய்வுக்கும் இலங்கை இந்துக் கோயில்கள் பற்றிய ஆய்வுக்கும் துணை செய்யக்கூடிய நூலாக இது அமைகின்றது. செ. குணசிங்கம் திருக்கோணஸ்வரக் கோயிலை அடிப்படையாக வைத்து மிகப்பெரிய தொருஆய்வு நூலை 1973இல் வெளியிட்டார்.

கோணேஸ்வரம் என்னும் இந்நூல் ஏற்கனவே இக்கட்டுரையில் முதலாவது பிரிவிலே குறிப்பிடப் பட்டுள்ளது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 1984இல் "இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள்" என்னும் நூலை வெளியிட்டது. இதுவும் ஓர் அறிமுக நூலாகவே அமைந்தது. இந்துக் கோயில்கள் பற்றிய ஆய்வுக்கு இத் திணைக்களம் பெரிதும் உதவிவந்துள்ளது. அ.சண்முகதாஸ்,மனோன்மணி சண்முகதாஸ் இருவரும் பருத்தித்துறை யில் உள்ள தும்பளை என்னும் கிராமத்தில் அமைந்துள்ள நெல்லண் டைப் பத்திரகாளியம்மன் கோயிலைப் பற்றிய ஆய்வுநூலாக "இத்திமரத்தாள்" என்னும் நூலை 1985இல் வெளியிட்டனர். இந்துக் கோயில்கள் பற்றிய அறிமுகநூலை வெளியிட்ட இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் திருகோணமலை,மட்டக்களப்பு பிரதேச கோயில்கள் தொடர்பாக இரண்டு ஆய்வு நூல்கள் வெளியிட உதவிற்று. இவ்விரு நூல்களும் "இரு மாவட்டங்களின் கோயில்கள் பற்றிய விரிவான ஆய்வுகளாக அமைந்தன. இலங்கைக் கோயில்களின் வரலாறு தொடர்பான அறிவு வளர்ச்சியில் இந்நூல்கள் முக்கிய பங்கினைப் பெறுகின்றன என்று அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்" என்று திணைக்களப் பணிப்பாளர் க. சண்முகலிங்கம் குறிப்பிடுவது பொருத்தமானதே. (இலங்கையின் இந்துக்கோயில்கள் அறிமுகவுரையில்)

1989இல் சணமுகதாசும் மனோன்மணிசண்முகதாசும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் பற்றிய ஆய்வு நூலாக "ஆற்றங்கரையான்" என்னும் நூலை எழுதி வெளியிட்டனர். இந்நூலில் ஆய்வுரைகளாக முன்னுக்குப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையும் பின்னுக்குப் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் எழுத்தியுள்ளனர்.இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முயற்சியினால் 1994 இல் "இலங்கையின் இந்துக் கோயில்" என்னும் ஆய்வுநூல் பேராசிரியர் சி. பத்ம நாதனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது. ஒன்பது கோயில்கள் பற்றியும் ஒரு கல்வெட்டுப்பற்றியும் பத்து ஆய்வுக்கட்டுரைகள் இந்நூ லிலே இடம்பெறுகின்றன. இலங் கையிலே பெருந்தொகையான கோயில்கள் உள்ளன. இவற்றில பெரும்பாலானவற்றிற்குக் கும்பாபிஷேக மலர்கள், சித்திரத்தேர் வெள்ளோட்ட மலர்கள் எனப்பல வெளியிடப் பட்டுள்ளன. அவை தனியாகத் தொகுக்கப்பட வேண்டியன.சில ஆய்வுக் கட்டுரைகள் அவற்றிலும் வெளியாகியுள்ளன. அத்தகையன சிற்சில வேளைகளில் இக்கட்டுரையிலே சேர்க்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேணல் கடாபியின் சவால் எதிரொலி
# ஆறு முக்கிய நகரங்களில்
# அமெரிக்கா குண்டுவீச்சு

(டிரிபோலி)

லிபியாவில் அரசுக்கெதிராகப் போராடிவரும் மக்களை ஜனாதிபதி கடாபி கொன்று குவித்ததையடுத்து லிபியா மீது அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து கூட்டுப் படைகள் போர் தொடுத்தன. தலைநகரம் டிரிபோலி மற்றும் பல்வேறு இடங்களில் கூட்டுப் படைகள் விமானம்மூலம் குண்டுவீசின. ஏவுகணைகளும் வீசப்பட்டன.

டிரிபோலியில்உள்ள கடாபியின் மாளிகை மீது குண்டு வீசப்பட்டது. இதில் மாளிகையின் மதிற்சுவர் இடிந்து விழுந்தது. இதனால் ஆத்திரமடைந்த கடாபி அமெரிக்காவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார். அமெரிக்காவை போரில் தோற்கடிப்போம் என்று சவால் விடுத்தார்.

இதையடுத்து அமெரிக்கக் கூட்டுப்படைகள் லிபியா மீதான தாக்குதலில் தீவிரப்படுத்தியுள்ளன. நேற்று முன்தினம் இரவு போர் விமானங்கள் பறந்து வந்து பல தடவை குண்டு வீசின. ஏவுகணைகளும் வீசப்பட்டன. தலைநகரம் டிரிபோலி, மிர்சதா, சின்தன், அனுபியா, ஜாமர், பெங்காசி ஆகிய 6 நகரங்களை குறிவைத்து குண்டுகளை வீசினார்கள். இந்த 6 நகரங்களில் லிபியா படை முகாம்கள் இருந்தன.

பெரும்பாலும் அவற்றைக் குறி வைத்தே தாக்குதல் நடந்தது. இதில் இராணுவ வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் அழிக்கப்பட்டன. கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 175 தடவை குண்டுகள் வீசப்பட்டன. இந்தத் தாக்குதல் நடந்ததும் அரசுக்கெதிராக போராடிவரும் போராட்டக்காரர்கள் மீது கடாபியின் படை கண்மூடித்தனமாகத் தாக்கியது.

இதனால் அந்தப் படைகளைக் குறிவைத்து குண்டுகளை வீசினார்கள். மிர்சதா நகரில் கடாபி படை தாக்கியதில் 16 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது. லிபியா வான்



வீதி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டதாக இங்கிலாந்து இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

# சவுதி அரேபியாவில் உள்ளூராட்சித் தேர்தல்

(ரியாத்)

சவுதியரேபியாவில் விரைவில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என்று அரசின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறலாம் என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. தொடர்ந்து தேர்தலில் பெண்களின் பங்களிப்பு என்ன என்பது அரசின் அறிவிப்பில் பின்னர் தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. •

முன்னதாக கடந்த 40 ஆண்டு கால அரசியலில் கடந்த 2005ஆம் ஆண்டு முதன்முறையாக மாநகர சபைத்தேர்தல் நடைபெற்றது.

அதில் பெண்கள் பங்கேற்றனர். இருப்பினும் அரசியல் ரீதியாக வெற்றி பெறமுடியாமல் போனது. தொடர்ந்து கடந்த 2009ஆம் ஆண்டு மீண்டும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடிபு செய்தபோது பல்வேறு காரணங்களால் அவையும் ஒத்திவைக்கப்பட்டன.

2 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது தேர்தலை நடத்திவிட முடிபு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் அல்லது ஒக்டோபர் மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்தி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)




# போராட்டத்தை ஒடுக்க ஏமனில் அவசரநிலை பிரகடனம்


ஏமன் ஜனாதிபதிக்கு எதிராக நடக்கும் போராட்டத்தை ஒடுக்க அவசரநிலை பிரகடனத்தை பிறப்பிக்க அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே கடந்த 32 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வருகிறார். அவரது காலத்தில் பொருளாதார தேக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல்வேறு காரணங்களால் மக்கள் மத்தியில் அதிருப்தி எழுந்தது.

அதைத் தொடர்ந்து சலே பதவிவிலகக் கோரி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இதையடுத்து சில மாதங்களில் பதவி விலகுவதாக சலே அறிவித்தார்.

ஆனால் உடனே பதவிவிலகக் கோரி மக்கள் நடத்தும் தொடர் போராட்டம் தற்போது தீவிரம் அடைந்துள்ளது. கடந்த வெள்ளியன்று பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டதில் 50க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவசரமாக நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. மொத்தமுள்ள 301 உறுப்பினர்களில் 160 பேர் மட்டுமே அதில் கலந்து கொண்டனர். அப்போது போராட்டத்தைக் கட்டுப்படுத்த அவசரநிலை பிரகடனம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. பின்னர் நடந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு அவசரநிலை பிரகடனத்துக்கான ஒப்புதல் பெறப்பட்டது. இதையடுத்து ஏமனில் அடுத்த 30 நாட்களுக்கு அவசர நிலை பிரகடனம் அமுலில் இருக்கும்.

அரசுக்கெதிராக நடக்கும் போராட்டத்தில் உள்நாட்டுப் போர் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே நாட்டு மக்களின் நலனையும் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி சலே தெரிவித்துள்ளார். முன்னதாக ஜனாதிபதி உடனடியாக பதவிவிலகக் கோரி அந்நாட்டு எதிர்க்கட்சிகள் இன்று பெரியளவில் போராட்டம் நடத்தவுள்ளது. (ஸ்ரீ)



நம்ம நாட்டுல இப்படி நடக்குமா? மேல்படம்: ஜப்பானின் ஐவேட் மாகாணத்தில் நாகா பகுதியில் கடந்த 11ஆம் திகதி நிலநடுக்கத்தால் கடுமையாக சேதம் அடைந்த வீதி.

கீழ்படம்: 17ஆம் திகதி அதே வீதி புனரமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டு விட்டது. மோசமாக சேதமடைந்த ஒரு வீதியை ஏழே நாட்களில் ஜப்பான் அரசு சீரமைத்துக் கொடுத்து விட்டது.

# அணுக்கதிர் வீச்சு பாதிப்பு; ஜப்பானில் குடிநீருக்கு தடை

ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து வெளியேறிவரும் கதிர்வீச்சு 240 கி.மீற்றர் தெற்கில் உள்ள டோக்கியோவில் குடிநீர்க் குழாய்களில் வரும் நீரில் கலந்துள்ளது தெரியவந்துள்ளது.



இதையடுத்து அந்தக் குடிநீரைப் பயன்படுத்த வேண்டாம் என்று டோக்கியோ நகர அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புகுஷிமா அணுமின் நிலையத்தில் உள்ள ஆறு உலைகளுக்கும் தற்போது மின்னிணைப்புக் கொடுக்கப்பட்டு அதன் மூலம்நீரை உட்செலுத்தி குளிரூட்டும்முறைகள் நடந்து வருகின்றன. நேற்று முன்தினம் மூன்றாம் உலையில் இருந்து திடீரென கரும்புகை வெளியேறியது. இந்நிலையில் அணு உலைகளில் இருந்து தொடர்ந்து வெளியேறிவரும் கதிர்வீச்சு 240 கீ.மீற்றர் தெற்கில் உள்ள டோக்கியோ நகரம் வரை பரவியுள்ளது. டோக்கியோவின் மையப் பகுதி யில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத் தில் அதிகாரிகள் பரிசோதனை மேற்கொண்ட போது குழந்தைகளுக்கான அளவைவிட அதிகளவில் கதிர்வீச்சுக் கலந்திருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து அருகில் உள்ள ஐந்து நகரங்களில் உள்ள குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டாம் என்றும் மற்றவர்கள்அதைப் பயன்படுத்தலாம் என்றும் நகர அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். புகுஷிமாவில் விளையும் கீரை உள்ளிட்ட காய்கறிகளிலும் அதிகளவில் கதிர்வீச்சுக் கலந்திருப்பதால் மக்கள் அதை உண்ணவேண்டாம் என்று பிரதமர் நவோட்டோ கான் கேட்டுக் கொண்டுள் ளார். கடந்த இரு வாரங்களில் உணவுப் பொருட்கள் குறித்து அரசு எச்சரிக்கை விடுப்பது இதுதான் முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்காதடை

ஜப்பானில் உணவுப் பொருட்களில் கதிர் வீச்சுஅதிகரித்திருப்பதையடுத்து புகுஷிமா, இபாராக்கி, டோச்சிகி மற்றும் குன்மா ஆகிய நான்கு மாகாணங்களைச் சேர்ந்த பால், பால் பொருட்கள், காய்கறிகள், பழங்கள் ஆகிய உணவுப் பொருட்கள் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்ய அந்நாட்டு உணவு மற்றும் மருத்துவ நிர்வாகம் தடை விதித்துள்ளது.

இதேவேளை நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் ஜப்பானில் ஏற்பட்ட பொருளாதாரச் சேதம் ஒட்டுமொத்தமாக, 13 இலட்சத்து 90 ஆயிரத்து 500 கோடி ரூபாயாக(309 பில்லியன் அமெரிக்க டொலர்) இருக்கும் என்று அந்நாட்டு மத்திய அமைச்சரவை அலுவலகம் மதிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சிரியாவில் அரசுக்கு எதிராக போராடிய 15பேர் சுட்டுக்கொலை

(டேரா)

எகிப்து, துனிசியா, லிபியாவைத் தொடர்ந்து சிரியா நாட்டிலும் அரசுக்கு எதிரா போராட்டங்கள் வெடித்துள்ளன. சிரியா நாட்டில் 1967 ஆம் ஆண்டில் இருந்து அவசர நிலை பிரகடனம் அமுலில் உள்ளது. ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு வருகிறது.

அங்கு 30 ஆண்டுகளாக அதிகாரத்தில் இருந்த ஹபீஸ் அல்சயீத் மரணம் அடைந்ததை அடுத்து 2000 ஆம் ஆண்டு அவரது மகன் பஷர் அல் சயீத் ஜனாதிபதியானார். அவர் சர்வாதிகார ஆட்சியை நடத்தி வருகிறார். எனவே அவருக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து போராட்டம் தீவிரமாகி உள்ளது. நேற்று முன்தினம் டேரா நகரில் போராட்டக்காரர்கள் நகரின் மையப்பகுதியை நோக்கி ஊர்வலமாக சென்றனர். அப்போது அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் 6 பேர் கொல்லப்பட்டனர். இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்காக போராட்டக்காரர்கள் தூக்கிச் சென்றனர்.

அப்போது அவர்கள் வன்முறையில் இறங்கினார்கள். அவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதில் 9 பேர் கொல்லப்பட்டனர். இத்துடன் பலியானவர்கள் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது. ஆனால் 37 பேர் கொல்லப்பட்டதாக சிரியா மனித உரிமை அமைப்புக்கள் கூறியுள்ளன. 15பேர் கொல்லப்பட்டதையடுத்து அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரமாகியுள்ளது. (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லை மாவட்டத்தில் யுகசக்தி மகளிர் சம்மேளனத்தின் ஊடாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் பெண்களுக்கான கனடா அன்புக்கரங்கள் அமைப்பு வழங்கிய நிதி உதவு தொகை வழங்கும் நிகழ்வு அண்மையில் மாங்குளத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் , வவுனியா நகரசபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் ஆகியோர் உதவித் தொகையை வழங்குவதையும் கலந்து கொண்ட பெண்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கிழக்கு மாகாணத்தில் ஆயுர்வேத வைத்தியர்கள் நியமனம்

கிழக்கு மாகாணத்தில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கான வைத்திய நியமனம் எதிர்வரும் 31 ஆம் திகதி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் நடைபெறவுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்துள்ளார்.

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக வருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்ற பட்சத்தில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது.

வைத்தியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்ற வைத்தியசாலைகளுக்கு இப்புதிய வைத்திய நியமனம் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# இளவயதினர் மத்தியில் வாய்ப் புற்றுநோய் தாக்கம்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

இலங்கையில் இருபது வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் மத்தியில் வாய்ப்புற்றுநோய் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

பதுளை, மொனராகல, வெலிமட ஆகிய பகுதிகளிலிருந்து இதுவரை 25 பேர் இந்த நோயுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுள் சிலருக்கு இதயத் தசைகள் மற்றும் முதுகெலும்பு என்பனவற்றிலும் புற்றுநோய் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாபுல் பாவனை மற்றும் மரக்கறிச் செய்கைகளில் அதிகம் இரசாயனம் பாவிக்கப்படுகின்றமை என்பனவே இந்தப் புற்றுநோய்க்கான பிரதான காரணிகளென இனங்காணப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# உலகவங்கி வழங்கவிருந்த இலங்கைக்கான கடனுதவி ரத்து

(கொழும்பு)

மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளில் 7 ஆவது இலக்கான நிலைத்திருக்கும் சுற்றுச் சூழல் என்பது பிரச்சினையை சந்தித்துள்ளது.

அரசாங்கம் அபிவிருத்தி முன்னுரிமைகளை சரியாக ஏற்படுத்தத் தவறியதனால் இந்தத்திட்டத்துக்கு உலக வங்கி வழங்கவிருந்த 30 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் அரசாங்கத்துக்கு கிடைக்காமல் போயுள்ளது.

இலங்கை உயிர் பல்லினத்தன்மையில் உயர் வளம் கொண்டிருந்தாலும் சுற்றுச் சூழல் தொகுதி மற்றும் உயிர்பல்லினத் தன்மை ஆகியவை மோசமாக பாதிக்கப்படும் நிலைமை காணப்படுகிறது. இலங்கை சில விடயங்களில் அதன் போக்கை மாற்றியமைத்துக் கொண்டால் நிறுத்தப்பட்ட கடன் திரும்பக் கிடைக்கக் கூடுமென ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

வனவிலங்கு திணைக்களம் உலக வங்கியுடன் இணைந்து மிலேனிய அபிவிருத்தி இலக்கு 7ஐ தீர்மானித்தது. இதனை அமுல்படுத்துவதற்கான சகல ஆயத்தங்களும் முடிவடையும் நிலையில் அரசாங்கம் திட்ட வரைபில் மாற்றங்களை கோரியதுடன் புது விடயங்களை சேர்க்க வேண்டுமெனவும் கோரியது.

அரசாங்கத்தின் கோரிக்கை இந்த திட்டத்தினூடாக உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதாக இருந்தமையால் அரசாங்கத்தின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்த திட்டத்தை கைவிடுவதே மிகச் சிறந்த தீர்வென உலக வங்கி கருதுகின்றது. (ஸ்ரீ-2)

# தமிழினியை மே 9வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் மகளிர் அணித் தலைவி தமிழினியை எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழினி எனப்படும் சுப்ரமணியம் சிவகாமியை கடந்த 22 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்திய இரகசியப் பொலிசார் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தனர். குறித்த அறிக்கையை பரிசீலித்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவை பிறப்பித்துள்ளது.

சட்டமாஅதிபர் வழங்கும் ஆலோசனைக்கு அமைய தமிழினி குறித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இரகசியப் பொலிசார் நீதிமன்றிற்கு அறிவித்துள்ளனர்.

வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரச படைகளிடம் சரணடைந்த தமிழினியை இரகசியப் பொலிசார் கைது செய்து தடுத்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# புனரமைப்பு செய்யப்பட்ட கண் சத்திரசிகிச்சை நிலையம் சுகாதார அமைச்சின் செயலாளரால் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் புனரமைப்புச் செய்யப்பட்ட கண் சத்திரசிகிச்சை நிலையத்தை சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்திய கலாநிதி எஸ்.மகிபால உத்தியோகபூர்வமாக நேற்று திறந்து வைத்தார்.

சுகாதார அமைச்சின் பணிப்பிற்கமைய 25 இலட்சம் ரூபாய் செலவில் இந்த கண்சத்திரசிகிச்சை நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இவற்றோடு கண் சத்திரசிகிச்சை நிலையத்திற்கு சுகாதார அமைச்சினால் அதிநவீன சத்திரசிகிச்சை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதனை சுகாதார அமைச்சின் செயலாளர் மகிபால யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவானி பசுபதிராஜாவிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை ஆலோசகர் திருமதி தர்மினி தர்மபால, கண் சத்திரசிகிச்சை நிபுணர் எம்.ரவிராஜ் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுகள், திணைக்களங்களில் கடமை புரியும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை செயலமர்வு வடமாகாண உதவிக் கணக்காய்வாளர் தலைமையில் பண்ணையில் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு அருகாமையிலுள்ள மார்பு நோய் சிகிச்சை நிலைய மேல்மாடியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

எனவே, சகல நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களையும் கலந்துகொள்ளும்படி வடமாகாண அரச சேவைகள், பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-4-29)


# வடபகுதி மீனவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது

## வடபிராந்திய கடற்படைத்தளபதி தெரிவிப்பு

இந்திய மீனவர்கள் வடபகுதி கடற்பரப்பிற்கு வந்து மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதால் வடக்கில் உள்ள தமிழ் மீனவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாக இலங்கை கடற்படையின் வடபிராந்திய கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சுசித் வீரசேகர தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற போது அமுல்படுத்தப்பட்டிருந்த மீன்பிடி தடைகள் தற்போது நீக்கப்பட்டுள்ளது. எனினும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்கு வந்து மீன் வளத்தை அள்ளி செல்வதால் வடபகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண இந்திய-இலங்கை இடையிலான இராஜதந்திர ரீதியிலான வேலைத்திட்டங்கள் அவசியம் எனவும் இந்த பிரச்சினைக்கு இரு நாடுகளின் கடற்படைகளால் மாத்திரம் தீர்வு காண முடியாது எனவும் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)



கனடா பழைய மாணவர்களால் வழங்கப்பட்ட சகல வலையமைப்புகளுடனான கணனி அறை அண்மையில் யா/மகாஜனாக்கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது. மாணவர்கள் கணனி கற்றலில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். (படம்:-பாலமுரளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யா/போதனா வைத்தியசாலையில் புனரமைப்பு செய்யப்பட்ட கண் சத்திர சிகிச்சை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை கண்சிகிச்சை ஆலோசகர் திருமதி தர்மினி தர்மபால மங்கல விளக்கேற்றுவதையும் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்திய கலாநிதி எஸ். மகிபால பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதையும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி பவானி பசுபதி ராஜாவிடம் செயலாளர் மகிபால கண்சிகிச்சை உபகரணங்களை கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-எஸ்.கரன்)*

# வடமராட்சி கடற்பரப்பில் இந்திய கடற்படையினர் ரோந்து

## கடலுக்கு செல்ல மீனவர்கள் அச்சம்

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய கடற்படையினர் அத்துமீறிய ரோந்துப் பணியில் ஈடுபட்டமையால் நேற்றைய தினம் கடற்தொழிலுக்குச் செல்ல அப்பிரதேச மீனவர்கெள் அச்சமடைந்துள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை கவலை தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்படையினரால் அண்மையில் வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த 3 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்நிலை தமக்கும் ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவே மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு அச்சமடைந்துள்ளதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மேற்குறித்த கடற்பகுதியில் நண்பகலில் இருந்து நேற்று வரை இந்தியக் கடற்படையின் இரண்டு டோறாப் படகுகள் வடமராட்சி கடற்பரப்பின் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளது. இதனால் நேற்றைய தினம் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டதாக அ.எமிலி யாம்பிள்ளை தெரிவித்தார். (ஸ்ரீ-4-24)

# ஸ்ரீஅம்மா பகவானின் கூட்டுப் பிரார்த்தனை

ஸ்ரீ அம்மா பகவான் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தியா வரதபாளையம், நேமம் சென்று அம்மா பகவானின் நேரடி தரிசனம் பெற்றுக் கொள்ளவிரும்பும் பக்தர்களுக்காக இப்பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறவுள்ளதால் விரும்பும் பக்தர்களைக் கலந்து கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# பல்கலை நிர்வாகத்தை மாணவர்களின் தேவைக்கேற்ப நடத்த முடியாது

## *உயர் கல்வியமைச்சர் தெரிவிப்பு*

பல்கலைக்கழக நிர்வாகத்தில் குழப்பம் விளைவிக்கின்ற மாணவர்களின் தேவைக்கேற்ப நடத்தமுடியாது என உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயிலுகின்ற பல்கலைக்கழகங்களில் ஜே.வி.பியினர் புகுந்து குழப்பங்களை ஏற்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான குழப்பங்களில் ஈடுபடுகின்ற மாணவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு உயரிய தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே அவ்வாறான மாணவர்களை பாதுகாத்து அவர்களின் கல்வியை சீர்படுத்த வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)



அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தால் நடாத்தப் பெற்ற வருடாந்த சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் கௌரவிக்கப்பட்ட சாதனையாளர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். *(படம்:-பாலைஹரனி)*

# சக்தி வாய்ந்த கட்சியாக ஐ.தே.க.உருவெடுக்கும்

## மங்களசமரவீர எம்.பி.தெரிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சி சக்தி வாய்ந்த கட்சியாக இனி எதிர்கால முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல் காலம் தொடக்கம் கட்சியின் தலைமைத்தும் குறித்து பல்வேறு பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டு வந்தன.

எனினும் நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூடி இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ரணில் விக்ரமசிங்கவின் அனுபவம் மிக்க தலைமைத்துவம் தொடர்ந்து தேவை என தீர்மானித்தது.

இதனடிப்படையில் அவரையே தொடர்ந்தும் தலைவராகவே செயற்பட கட்சியின் செயற்குழுவில் ஒரு எதிர்ப்புமின்றி, ஏகமனதாகத் தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி பொது மக்களுக்காக மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து, கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் இரண்டொரு நாட்களில் அறிவிப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்சி தொடர்பிலோ கட்சியின் தலைமைத்துவம் தொடர்பிலோ ப்ழைய விமர்சனங்களை முன்வைப்பவர்கள் மற்றும் கட்சியில் உட்பூசல்களை ஏற்படுத்த முயற்சிப்பவர்களுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் கழகங்களுக்கிடையிலான போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டி வரிசையில் நாளை சனிக்கிழமை பெண்களுக்கான பூப்பந்துப் போட்டி சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் பெண்களுக்கான எல்லே போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதென தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-29)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**கொழும்பு தலைநகர் கூட்டுத்தாபனம்!**

தலைநகரான கொழும்பு மாநகரை மையமாக வைத்து பெரிய அளவிலான நகர வலையம் ஒன்றை அமைக்கும் வகையில் அதனை அண்மித்த ஐந்து உள்ளூராட்சி மன்றங்களை ஒருங்கிணைத்து கொழும்பு தலைநகர் கூட்டுத்தாபனத்தை அமைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

**பொதுநலவாய நாடுகளின் மாநாடு!**

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் .பீரிசின் அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்ப பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மாநாட்டை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை நடவடிக்கை குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

**நிதி நிறுவனச் சட்டம் இரத்து!**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சர் என்ற வகையில் சமர்ப்பித்த ஆலோசனைக்கு அமைவாக கடந்த 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதி நிறுவனச் சட்டத்தை இரத்து செய்ய அமைச்சரவை முடிவு எடுத்துள்ளது.

**வீடமைப்புக்கு அமைச்சுக்கள் ஒருங்கிணைந்த குழு!**

அமைச்சர் விமல் வீரவன்சவின் அமைச்சரவை பத்திரத்துக்கு ஏற்ப வீடமைப்புத் துறையின் மேம்பாட்டுக்காக அத்துறை சார்ந்த அமைச்சுக்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அமைச்சர்களின் குழு ஒன்றை ஏற்படுத்தும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

**உயர் கல்வி நிறுவன ஒழுங்குபடுத்தல் சபை!**

தரக்குறைவான உயர்கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவன ஒழுங்குபடுத்தல் சபை ஒன்றை ஏற்படுத்துவதாக அமைச்சரவைத் தீர்மானித்துள்ளது. உயர் கல்வி அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க இதற்கான அமைச்சரவை ஆலோசனையை முன் வைத்திருந்தார்.

**உணவு பாதுகாப்பு மாநாடு!**

உணவு பாதுகாப்பு போஷாக்கு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான நீரியல் வளர்ப்பு தொடர்பான ஆசிய வலயத்துக்கான அமைச்சர்களின் மாநாட்டை எதிர்வரும் ஜூலை மாதம் 28, 29 ஆம் திகதிகளில் இலங்கையில் நடத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது. அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடத்திற்கு 5 இலட்சம் ரூபாவிற்குக் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வரி விலக்களிப்பு

## அரசு அறிவிப்பு

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்கும் வகையிலேயே வரி முறைமைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனூடாக வருடத்திற்கு 5 இலட்சம் ரூபாவிற்குக் குறைவான வருமானம் பெறுவோருக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை பெறுமதிசேர் வரி, நாட்டைக் கட்டியெழுப்புதல், பொருளாதாரச் சேவை விதிப்பனவு, பற்றுகள், உற்பத்தித் தீர்வை உள்ளிட்ட வரிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்த யோசனைகள் வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அனுமதியும் பெறப்பட்டது.

எனினும் சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் சட்டமூலங்களைத் திருத்த வேண்டியேற்பட்டது. அதனடிப்படையிலேயே வரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

மத்திய, குறைந்த மற்றும் வியாபார வரிகளைச் செலுத்துவோர் வரி அறவீடுகளைத் திருத்துமாறு கோரி நின்றனர். அதனடிப்படையில் வரிகளை இணைத்தல், இன்றேல் வரி முறைமையை இலகுவாக்கல் எனத் தீர்மானிக்கப்பட்டது.

வரி செலுத்த வேண்டியவர்களில் சிறு தொகையினரே வரி செலுத்துகின்றனர். வரி நிர்வாகத்தின் கீழ் அவ்வாறானவர்கள் உள்வாங்கப்படல் வேண்டும்.

வரியை இலகுபடுத்துவதன் மூலம் மத்திய மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வரி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்க வேண்டும். அதேயளவு வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும். இல்லையேல் நிவாரணப் பொதிக்கு பிரச்சினை ஏற்படும். இது வெளிநாட்டுக் கடன், தேசிய சேமிப்பு போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சேமிப்புப் பொறுப்பையும் கொள்கையையும் மென்மேலும் முன்னெடுத்து தேசிய சேமிப்பு வீதத்தை அதிகரிக்க வேண்டும். சகலருக்கும் ஏற்புடைய வகையில் வரி முறைமைகளில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

தேசிய வருமானத்தை இலக்கு வைத்தே வரி முறைமைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலமாக முதலீடுகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்றார். (ஸ்ரீ-2)

# பாடசாலை நுழைவாயில் திறப்பு விழா

(குரவெட்டி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் நுழைவாயில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இன்று காலை 8 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பாடசாலையின் கனடா பழைய மாணவர் சங்கத்தின் 8 இலட்சம் நிதியுதவியுடன் இந்நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் ஓய்வுபெற்ற வடக்குக் கிழக்கு மேலதிக கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பி திலகவதி கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் நலன்விரும்பிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-24)

# விபத்துச் சம்பவங்களில் இருவர் படுகாயம்

(குரவெட்டி)

வடமராட்சியில் வெவ்வேறு சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களில் முதலாவது சம்பவத்தில் குஞ்சர் கடைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு துவிச்சக்கர வண்டியிலிருந்து பாலத்திற்குள் தவறி வீழ்ந்த அல்வாய் தெற்கு வதிரியைச் சேர்ந்த தேவராஜா பகீதரன் (வயது 22) என்ற இளைஞர் முகத்தில் காயமடைந்துள்ளார்.

மற்றுமொரு சம்பவத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வயரிங் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளி கூரையிலிருந்து தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளார். அத்துடன் ஆணியையும் விழுங்கியுள்ளார்.

இச்சம்பவத்தில் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த துரைலிங்கம் யுத்ராஜ் (வயது 29) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (ஸ்ரீ-4-24)

# ஏப்ரல் முதல் புதிய போக்குவரத்து விதிகள் அமுல்படுத்தப்படவுள்ளன

(கொழும்பு)

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் வீதிப் போக்குவரத்து விதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் புதிய ஒழுங்கு முறைகளை அறிமுகப்படுத்தவும் போக்குவரத்துப் பொலிஸார் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மோட்டார் வாகனங்களை நடைபாதையோரமாக நிறுத்துவதற்குத் தடைவிதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முச்சக்கரவண்டிகளை அதற்கென ஒதுக்கப்படும் தரிப்பிடங்களில் நிறுத்த மட்டுமே அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எந்தவொரு வாகனத்தையும் சொற்ப நேரத்திற்கேனும் சரி, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக நிறுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, மொபெட் ரக மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் அவசியமென்ற புதிய போக்குவரத்து விதியையும் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஸ்ரீ-2)

# தமக்கு எதிராகச் செயற்பட்டோரை பழிவாங்கும் முயற்சியில் ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியில் தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களின் விபரங்களைப் பட்டியற்படுத்துமாறு ரணில் விக்கிரமசிங்க தனக்கு நம்பிக்கையானவர்களிடம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த நாட்களில் ரணில் விக்கிரமசிங்கவை கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தியும் அவருக்காக சஜித் பிரேமதாசவை கட்சித் தலைவராக நியமிக்க வேண்டுமெனவும் பலர் வலியுறுத்தி வந்தனர்.

எனினும் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தின்போது, ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகத் தெரிவானார்.

இந்நிலையில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையில் ரணில் ஈடுபட்டுள்ளதாகக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் தமக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களின் விபரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய இருவருக்கு அபராதம்

சாவகச்சேரி நகரப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி ஊரி மண்ணை வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இரு வெவ்வேறு இடங்களில் இருவரும் கைதுசெய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதில் நீதவான் எஸ்.கணபதிப்பிள்ளை முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதவான் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் தலா 10 ஆயிரம் ரூபாய் செலுத்த உத்தரவிட்டதுடன் வாகனத்தை தலா 20 இலட்சம் ரூபாய் பிணைமுறியிலும் எடுப்பதற்கு அனுமதியளித்ததுடன் ஊரி மண்ணை பறிமுதல் செய்யும்படி பொலிஸாருக்கு ஆணை பிறப்பித்துள்ளார். (ஸ்ரீ-4-24)





ஹற்றன் நஷனல் வங்கியின் பத்தும் விமன 2010ஆம் ஆண்டுக்கான கிளை ரீதியிலான சீட்டிழுப்பு மானிப்பாய் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இவ்வங்கியின் வடபிராந்திய பிரதி பொதுமுகாமையாளர் சு.ரவி சீட்டிழுப்பில் வெற்றியீட்டியவருக்கு குளிர்சாதனப்பெட்டி ஒன்றை வழங்குவதனையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் நடக்கும் நடக்கட்டுமே
இருட்டினுள் நீதி மறையட்டுமே.
– தமிழ்ச் சினிமா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# புனர்வாழ்வு முகாம்களில் என்னதான் நடக்கிறது?

வன்னியில் நடந்த யுத்தத்தின் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இயங்கியவர்கள் என்று படையினரால் இனம் காணப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை புனர்வாழ்வு முகாம் என்று கூறுகின்றார்கள்.

தமிழில் புனர்வாழ்வு என்பது பெறுமதியான சொற்பதம். இழந்தவற்றை மீட்டுக்கொடுத்தல், தேவையானவற்றைப் பெற்றுக் கொடுத்தல், உயரிய வாழ்க்கைக்கு வழி சமைத்தல் என்ற அனைத்தையும் உள்ளடக்கிய பொருளை வெளிப்படுத்தும் சொல்லாக 'புனர்வாழ்வு' என்பது அமைகிறது.

ஆனால், இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு புனர்வாழ்வு முகாம் என்று கூறப்படுகின்ற போதிலும் அங்கு என்னதான் நடந்தாகின்றதென்பது புரியாத விடயமாகவே உள்ளது.

புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் கிணற்றில் வீழ்ந்து தற்கொலை. இன்னொருவர் மர்மமரணம். இப்படியான செய்திகளே வெளிவந்துகொண்டிருக்கின்றன.

புனர்வாழ்வுமுகாமில் இடம்பெறும்தற்கொலைகள், மர்ம மரணங்கள் குறித்து அத்தகைய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் சதா கண்ணீர் வடித்த வண்ணமுள்ளனர்.

ஒவ்வொருநாளும் ஏக்கத்துடன் பத்திரிகைகளை எடுத்து புனர்வாழ்வு முகாமில் ஏதேனும் நடந்துவிட்டதோ என்ற செய்திகளைத் தேடும்பரிதாபம் மிகவும் வேதனைக்குரியது.

எனவே, இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தார்மிகப் பொறுப்பு அரசு உட்பட மனித உரிமைகளை கண்காணிக்கின்ற– பாதுகாக்கின்ற சர்வதேச அமைப்புகள் மற்றும் நீதிபரிபாலனம் என்பவற்றிற்கு உண்டு.

எனினும் அந்த அமைப்புக்கள் இது தொடர்பில் கரிசனை கொள்வதாக தெரியவில்லை.

ஆக, தற்கொலை செய்து கொண்டால், மர்ம மரணம் நடந்தால் உடனடியாக இடம்பெறக் கூடிய விசாரணைகளோடு அந்த சோகம் முற்றுப் பெற்றுவிடுகின்றது.

அத்தகைய விசாரணைகள் தேவையாயினும் புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்று வரும் தற்கொலைகள், மர்ம மரணங்கள் என்பவற்றுக்கான காரணங்களைக் கண்டறிவது, தற்கொலை என்று கூறப்படுவது உண்மையில் தற்கொலைதானா? அல்லது அதனுள் ஏதேனும் சூக்குமங்கள் உண்டா என்பன பற்றிய ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

எதுவாயினும் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் உயிருக்கான உத்தரவாதத்தை அரசு பொறுப்பேற்க வேண்டும்.

அத்தகைய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலைக்காக பல்லாயிரக்கணக்கானவர்கள் காத்திருக்கின்றனர்– பார்த்திருக்கின்றனர்.

இவர்களில் வயதான பெற்றோர், பச்சிளம் பாலகர்கள், இளம் குடும்பத் தலைவிகள் என பலரும் அடங்குவர்.

ஆகையால் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மனித நேயத்தை கடைப்பிடிப்பது கட்டாயம்.

அதேநேரம் அவர்களின் விடுதலைக்கான ஊக்குவிப்புகளும் ஜனநாயகத்தின் பேரால் கொடுக்கப்பட வேண்டும்.

# அமெரிக்க முதலீட்டாளர்களை இலங்கைக்கு கொண்டு வருவதில் போர்க்குற்றம் தடை

மனித உரிமை மீறல்கள், போர் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி வருவதால் அமெரிக்க முதலீட்டாளர்களை இலங்கைக்கு கொண்டு வரும் தனது முயற்சிகள் தோல்வியடைந்து வருவதாக அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவம் உள்ள நாட்டிற்கு உதவி வழங்குவதை தடுக்கும் திருத்தச் சட்டம், போர் குற்றங்களை விசாரிக்குமாறு அமெரிக்க செனட் விடுத்துள்ள கோரிக்கை என்பன தடையாக அமைந்துள்ளன.

இலங்கையின் மிகப் பெரிய முதலீட்டாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் அமெரிக்கர்கள் ஆவர். அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் முதலீடு களை மேற்கொள்ள தடையேற்பட்டுள்ள போதிலும் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய அதிகமான பங்களிப்பை சீனாவே வழங்கி வருகிறது. (ந)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## ஆண்டவரின் அடிமையாவோம் விண்ணகம் எம்மில் மலர வைப்போம் (லூக் 1:26–38)

நாம் கிறிஸ்து பிறந்த விழாவை மார்கழி மாதம் 25ஆம் நாள் கொண்டாடுகின்றோம். இதற்கு இன்று பங்குனி 25ஆம் நாள், இயேசுவின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்ட நிகழ்ச்சியைத் திருச்சபை பெரு விழாவாக கொண்டாடுகிறது. கடவுளின் தூதர் மரியாவிடம் சென்று, 'இதோ நீர் கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்' என அறிவிக்கிறார். (லூக்1:31) மரியாவுக்கு திருமண ஒப்பந்தம் மட்டும் நடைபெற்றிருந்தது. மரியா கணவரோடு கூடி வாழவே இல்லை, 'இது எப்படி நிகழும்' என்று மரியா கேட்ட கேள்விக்கு வானதூதர் அளித்த பதில் 'வானதூதர் உன் மீது வருவார். வல்லமை பிறக்கும். வல்ல தேவன் வந்து பிறப்பார். கடவுளால் இயலாதது இந்த இகமதில் ஒன்றும்இல்லை. உலகில் இது உண்மையாகும்' மனிதர் பல திறமைகளைப் பெற்றிருக்கிறார். ஆனால் அவர்களுடைய திறமைக்கு ஒரு எல்லை உண்டு. எவ்வளவு தான் அறிவுத்திறன் கொண்டிருந்தாலும் மனிதனின் சாதனைகள் ஒரு எல்லைக்கு உட்பட்டவையே. ஆனால் 'கடவுளால் எல்லாம் கூடும்.'

'நான் ஆண்டவனின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' தாய் மரியாவின் விசுவாச அறிக்கை இது. ஆண்டவனின் தூதருக்கும் இன்று தான் அறிக்கையிட்டதை தன் வாழ்வின் இறுதிவரையிலும் கட்டி எழுப்பினாள் மரியா. மரியாவின் வாழ்வின் எல்லா நிகழ்வுகளிலும் வலுவூட்டி, வழி நடத்திச்சென்றது இந்தவிசுவாச அறிக்கை.

தனது விசுவாச அறிக்கை குருட்டு நம்பிக்கை அல்ல. மாறாக ஆழ்ந்த அறிவுபூர்வமானது என்பதை மரியா தன் பல்வேறு கேள்விகளில் உறுதிப்படுத்துகின்றார். வானதூதரின் வாழ்த்தில் மயங்கிவிடவில்லை. பதவிகிடைத்துவிடும் என்று அசந்து விடவில்லை. தனது கேள்விகளைக் கேட்டு சந்தேகங்களை தீர்த்துக் கொள்கிறார். வான தூதரால் சொல்லப்பட்ட செய்தியின் சான்றுகளை உறுதி செய்கிறார். அறிவுபூர்வமாக சில உண்மை களைக் கண்டபின் அறிவிற்கு அப்பாற்பட்ட ஆண்டவனின் ஆற்றலுக்கு தன்னை அர்ப்பணிக்கிறார்.

விசுவாசம், கடவுள் நம்பிக்கை இவை மூட நம்பிக்கை அல்ல. அறிவில் ஆரம்பமாகி ஆண்டவனின் அருளில் நிறைவடைவது. முழுமையாக அதன் காரண காரியங்களை அறிவுபூர்வமாகத் தெரிந்து கொண்ட காரணத்தால், தன் வாழ்வின் எல்லாச் சூழலிலும் குறிப்பாக நிரபராதியான தன் அன்பு மகனை இளம் வயதில் குற்றவாளியாகச் சிலுவையில் அறைந்து கொன்றதை அமைதியான உள்ளத்தோடு ஏற்றுக் கொள்ள முடிந்தது "நான் ஆண்டவரின் அடிமை" என்ற விசுவாச அறிக்கையால் தான். இந்த விசுவாச அறிக்கையும் வாழ்வும் நம் அன்னையை உலகம் போற்றும் பெண்ணாக, விண்ணக அரசியாக உயர்த்தியுள்ளது. அந்த அன்னையை வேண்டுவோம். விசுவசிப்போம் விண்ணகம் எம்மில் மலரும்.

ம. பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# வெள்ளி நற்சிந்தனை





## செவ்வியல் தமிழில் சீர்மியம்

தன் குறையைத் தானே உணரும் நிலை ஓர் உயர்ந்த பண்பாட்டு நிலையாகும். பிறரிடம் குறைகாண்பது எல்லோருக்கும் எளிதாகும். ஆனால் பிறரிடம் குறைகாண்பதற்கு முன்னர் தன்னிடமுள்ள குறைகளை எண்ணி பார்க்கக் கூடிய விழுமியம் மனிதனுக்கு இன்றியமையாதது. மணிவாசகரது பாடல்களில் அவர் தன்னுடைய குறைகளை வெளிப்படையாக எடுத்துக் கூறியுள்ளார். தான் இந்த உலகிலே மீண்டும் வந்து பிறப்பதற்கு அஞ்சவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்த பிறப்பின் பின்வரும் இறப்பிற்கு யாது செய்வேன் என்று இறைவனிடம் கூறுகிறார்.

எல்லா விதமான ஆசைகளையும் விட்டு நிற்கும் நிலையில் அவர் இருக்கிறார். தனக்கு விண்ணுலகத்தை ஆளும் பேறு எளிதில் கிடைப்பதாயினும் அதனை விரும்பமாட்டேன் என்கிறார். விண்ணுலத்தை விரும்பாதது மட்டும் அன்றி மண்ணுலகத்தை ஆள்வதற்கு விருப்பமில்லை என்கிறார். அவருடைய நினைப்பைப்பற்றி வெளிப்படையாகவே பேசுகிறார். இறையருள் ஒன்றை மட்டுமே பெற விரும்புவதாகச் சொல்கிறார்.

இறைவனுடைய தோற்றப் பொலிவை நினைவில் கொண்டு வந்து இறை சிந்தனையோடு அமைதியான வாழ்வு வாழ நினைக்கிறார். அதனால் இறைவனுடைய தோற்றத்தைத் தேனேயும் 'மலக்கொன்றைச் சிவனே' என்று பாடியுள்ளார். தேன் பொருந்திய கொன்றைமலர் அணிந்த சிவனின் திருக்கோலம் அவருடைய பாடலடியால் சொற்சித்திரமாக அமைந்துள்ளது. சிவன் அணிகின்ற மலர்களில் கொன்றைமலர் தனித்துவமானது. சங்கப் பாடல்களான அகநானூறு, புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து பாடல்களிலும் சிவன் தலையில் சூடும் மலராகக் கொன்றை குறிப்பிடப்பட்டுள்ளது. புறநானூறு 'கண்ணி தார் நறுங்கொன்றை தாமர் வண்ண மார்பிற் நாரும் கொன்றை' எனக் கடவுளின் திருக்கோலம் பற்றிய குறிப்புண்டு. தலையிலும் மார்பிலும் கொன்றை மலர் அணிந்த கோல அழகு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

மணிவாசகரும் சிவனின் திருக்கோலத்தைக்கண்டு வழிபட விரும்புகின்றார். எமது தலைவனே உன்னுடைய அருளை எப்போதும் பெறுவதென்று கேட்கும் தன்மை அவருடைய உலகியல் வாழ்வின் விருப்பமின்மையை காட்டுகின்றது. அவர் அதற்காகவே வருந்துகிறார். இதுவரை வாழ்ந்த வாழ்க்கையை விட்டு இறையன்பைத் தேடும் ஒரு வாழ்க்கையை தேடுகின்றார். எல்லாச் சிறப்பும் கொண்ட உலக வாழ்க்கையை விடுத்து இறையன்பைத் தேடும் புதிய தொரு வாழ்வியலைப் பெற முனைகின்றார். பிறப்புக் குறித்து அச்சம் கொள்ளாதவருக்கு அப்பிறப்பு நிலையற்றது என்பதும் தெளிவாகத் தெரிகிறது. ஒரு பிறப்பு நிகழும் போதே அதன் சிறப்பும் நிச்சயம் ஆகி விடுகின்றது. இது உலக வியப்பு. இவ்வியல்பை உணர்ந்தமையால் இறப்பை விடுத்து மனித நிலையிலே நின்று சிவனை வழிபட விரும்புகின்றார். விண்ணுலக வாழ்வை விட மண்ணுலகத்து வாழ்வின்மூலம்தான் இறைவனை உணர்ந்து நல்லருள் பெறலாம் என்ற உண்மையையே மணிவாசகர் தமது பாடலில் உணர்த்தியுள்ளார். தன்குறையை கூறித் தன்னிலையை விளக்கி இறையருள் பெறும் மணிவாசகரின் வழிகாட்டல் எல்லோருக்கும் பொருந்துவதாக உள்ளது.

யானேதும் பிறப்புஞ்சேன்
இறப்ப தனுக் கென் கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்தமிரேன்
தேனேயு மலர்க் கொன்றைச்
சிவனோயம் பெருமானெம்
மானேயுன் னருள் பெறுநாள்
என்றென்றே வருந்துவனே.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## உலகக்கிண்ணப் போட்டியில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்த முயன்றவர் கைது

உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட பயங்கரவாதியொருவரை கைதுசெய்திருப்பதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மலிக் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமபாத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்டர்போல் தலைவர் ரொனால்ட் நோபிள் சகிதம் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.


கைது செய்யப்பட்ட நபர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதையோ எந்த அமைப்பைச் சேர்ந்தவர் என்பதையோ அமைச்சர் மலிக் தெரிவிக்கவில்லை.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் போது பயங்கரவாதத் தாக்குதல் நடத்துவதற்கு தீவிரமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இச்சதியைக் கண்டுபிடிப்பதற்கு இன்டர்போல் உதவியது. இந்திய அரசாங்கத்திற்கு இதுகுறித்து அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் தலிபான்கள் செயற்பட ஆரம்பித்துள்ளனர். பயங்கரவாதிகளுக்கு எல்லைகளோ, மதங்களோ கிடையாது என்பதை மறந்துவிட வேண்டாம்.

தலிபான்கள் இந்தியாவில் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமைக்கான பல அறிகுறிகள் உள்ளன என அவர் மேலும் கூறியுள்ளார்.



இலங்கை அணிவீரர் சாமர கப்புகெதர உலகக் கிண்ணத் தொடரில் புதிய "கெயார் ஸ்ரைலில்" காட்சியளிக்கிறார்.

## துளித்துளியாய்...

### இறுதிப்போட்டி மும்பையில் ஏன்?

உலகக் கிண்ண இறுதிப்போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் ஏப்ரல் 2ஆம் திகதி நடக்கிறது. அங்கு வெறும் 33 ஆயிரத்து 442 இருக்கைகள் மட்டுமே உள்ளன. கொல்கத்தா, டில்லி, அகமதாபாத் ஆகிய மைதானங்களில் அதிக அளவில் இருக்கைகள் இருக்கும் போது மும்பையை ஐ.சி.சி தேர்வு செய்தது ஏன் என்று தலைமை செயல் அதிகாரி ஹாரூண் லோர்கேட்டிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அவர் இந்தியா இறுதிப்போட்டியில் நுழைந்து சச்சின் 100ஆவது சதம் அடித்து உலகக் கிண்ணத்தை இந்தியா வென்றால் மைதானத்தின் இருக்கை பற்றி கேள்வியே எழாது என்று பதில் அளித்தார். இந்தியா உலகக் கிண்ணம் வெல்லும் என இதன் மூலம் லோர்கேட் ஜோசியம் கூறியுள்ளார்.

### கலக்குகிறார் கங்குலி

கங்குலியின் புதிய அவதாரம் கிரிக்கெட் வர்ணணையாளர். இந்த துறையிலும் அவர் அசத்துகிறார். எந்தவிதமான ஆவண ஆதாரங்கள் இல்லாமல் கிரிக்கெட் விபரங்களை அவர் எடுத்து கூறும்விதம் சக வர்ணணையாளர்களை வியக்க வைத்துள்ளது.

### தோனி மவுசு போச்சு...

உலகக் கிண்ணம் தொடங்கும் முன் தோனி உச்சக்கட்டத்தில் இருந்தார். அவருக்கு அவ்வளவு விளம்பர வாய்ப்புகள். பேஸ்புக் டுவிட்டர் தேடுதல்கள் என ரசிகர்களின் பிடியில் உச்சத்தில் இருந்தார். போட்டி ஆரம்பமாகி இத்தனை நாட்களில் அவர் 4ஆவது இடத்தில் இருந்து 7ஆவது இடத்திற்கு சரிந்துவிட்டார். அவரை மற்றவர்கள் முந்திச் சென்றுவிட்டனர். டெண்டுல்கர் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். பொன்டிங், அப்ரிடி, திரோட் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

### இந்தியாவில் பயமில்லை

அடுத்த இரண்டு ஆட்டங்களை இந்தியாவில் ஆடுவதால் எங்களுக்கு எந்தவிதமான பயமும் இல்லை. முழுபாதுகாப்பு அளிக்கப்படும் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது என்று அப்ரிடி தெரிவித்துள்ளார். பயிற்சியாளர் வக்கார் யூனுஸ் கூறும்போது, இப்போது எல்லாம் சரியாகி விட்டது. நாங்கள் கிரிக்கெட் விளையாட செல்கிறோம். அது எங்களுக்கு சந்தோஷமே. ஆரோக்கியமான போட்டியை எதிர்பார்க்கிறோம் என்றார்.

## 18 000 ஓட்டங்களைக் கடந்தார் டெண்டுல்கர்

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 18 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

அஹமதாபாத்தில் நேற்று நடைபெற்ற அவுஸ்திரேலியா வுடனான உலகக்கிண்ண காலிறுதிப்போட்டியில் 45 ஓட்டங்களைப் பெற்றபோது ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடிய டெண்டுல்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

451 ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியில் விளையாடிய டெண்டுல்கர் இதுவரை ஒருநாள் போட்டிகளில் ஒரு இரட்டைச் சதம் உட்பட 48 சதங்கள் 94 அரைச்சதங்களையும்குவித்துள்ளார்.

இப் போட்டியில் 53 ஓட் டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இதே வேளை சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 100 ஆவது சதம் அடிப்பார் என எதிர்பார்த்த ரசிகர்களுக்கு டெண்டுல்கரின் ஆட்டமிழப்பு ஏமாற்றமளித்தது.



உலகக்கிண்ண அரங்கில் கடைசி ஆட்டத்தில் டெண்டுல்கரைச் சந்தித்த அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் உரையாடுவதை படத்தில் காணலாம்.




## உலகக்கிண்ண கிரிக்கெட்-2011



ரசிகர்களின் வேண்டுகோளிற்கிணங்க உலகக்கிண்ண இறுதியாட்ட விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி ஒரு வார காலத்திற்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

சம்பியனாகும் நாடு?..................................................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி **28.03.2011** இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..................................................

முகவரி..................................................

தொலைபேசி..................................................

தே.அ.அ.இல..................................................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்றும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna.
T.P:021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011



கொழும்பில் நாளை நடைபெறும் நான்காவது காலிறுதி ஆட்டத்தில் இலங்கை- இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. இப்போட்டிக்காக இரு அணி வீரர்களும் கடுமையான பயிற்சியில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம்.

# தென்னாபிரிக்கா – நியூசிலாந்து

# காலிறுதியில் இன்று பலப்பரீட்சை

(மிர்பூர்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் மிர்பூரில் இன்று நடைபெறும் மூன்றாவது காலிறுதிப் போட்டியில் பலம்வாய்ந்த தென்னாபிரிக்க அணி நியூசிலாந்தைச் சந்திக்கிறது.


இதில் தென்னாபிரிக்கா அசத்தல் வெற்றி பெறுமா? அல்லது நியூசிலாந்திடம் அடிபணியுமா என்ற எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

பத்தாவது உலகக் கிண்ணத் தொடரில் இன்று மிர்பூரில் மூன்றாவது காலிறுதி போட்டி நடக்கிறது. இதில் ஏ பிரிவில் நான்காவது இடம் பிடித்த நியூசிலாந்து அணி பி பிரிவில் முதலிடம் பெற்ற தென்னாபிரிக்காவை சந்திக்கிறது. அணித் தலைவர் சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்காக சிறப்பான முறையில் தயாராகிவந்துள்ளது.

லீக் சுற்றில் பங்கேற்ற 06 போட்டிகளில் இங்கிலாந்துக்கு எதிராக மட்டும் அதிர்ச்சித் தோல்வியடைந்தது. மற்ற 05 போட்டியிலும் வெற்றி பெற்று வலுவான அணியாக உருவெடுத்துள்ளது.

## டி வில்லியர்ஸ் பலம்

அணியின் துடுப்பாட்டம் மிகவும் வலுவாக உள்ளது. 04 போட்டிகளில் 318ஓட்டங்கள் குவித்த டி வில்லியர்ஸ், 299 ஓட்டங்கள் எடுத்த அம்லா, டுமினி (221) ஆகியோர் தொடர்ந்து நம்பிக்கை தருகின்றனர். ஆரம்பத்தில் சொதப்பிய கலிஸ் (178) அடுத்தடுத்த போட்டிகளில் எழுச்சிகண்டு வருவது அணித்தலைவர் சிமித்துக்கு (155) பெரிய நம்பிக்கையை கொடுத்துள்ளது.



தவிர டு பிளசிஸ், வான் விக் கடைசி நேர அதிரடிக்கு ரொபின் பீற்றர்சன் இருப்பது கூடுதல் பலம்.

## சுழல் மந்திரம்

இந்தியத் துணைக்கண்டத்து ஆடுகளங்களுக்கு ஏற்ப சரியான சுழல் கூட்டணியுடன் களமிறங்கியது தென்னாபிரிக்கா. ரொபின் பீற்றர்சன் (14 விக்கெட்டுக்கள்), இம்ரான் தாகீர் (12 விக்கெட்டுக்கள்) ஆகியோருடன் ஜெகான் போத்தாவும் (04 விக்கெட்டுக்கள்) இணைந்து எதிரணிக்கு பெரும் தொல்லையாக உருவெடுத்துள்ளனர்.

சரி இதிலிருந்து சற்றுத் தப்பிக்கலாம் என்று பார்த்தால் மறுபக்கம் வேகப் புயல் ஸ்ரையன் (10 விக்கெட்டுக்கள்), மோர்கல் (06 விக்கெட்டுக்கள்) ஜோடி மிரட்டுகின்றனர். இவர்களைத் தாண்டி ஓட்டங்களை சேர்ப்பது என்பது நியூசிலாந்து அணிக்கு சிக்கல்தான்.


## நிலையில்லாத நடுவரிசை

நியூசிலாந்து அணி தான் பங்கேற்ற 06 போட்டியில் 04 வென்று காலிறுதிக்குள் நுழைந்துள்ளது. இதில் பாகிஸ்தானுக்கு எதிரான மிகப் பெரிய வெற்றியும் அடங்கும். துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர்கள் பிரன்டன் மக்குலம் (239 ஓட்டங்கள்), குப்தில் (222 ஓட்டங்கள்) ஆகிய இருவரும் மட்டும் நம்பிக்கை தருகின்றனர்.

ரோஸ் ரெய்லர் மட்டும் (245 ஓட்டங்கள்) கடைசி நேரத்தில் அணியின் ஓட்டக் குவிப்புக்கு உதவுகிறார். ஆனால் நடுத்தர வரிசை தான் மிகவும் பலவீனமாகவுள்ளது. முன்னணி வீரர் ஜெசி ரைடர் (82 ஓட்டங்கள்) கடைசி தொடரில் பங்கேற்றும் ஸ்கொட் ஸ்ரைரிஸ் (69), பிராங்க்ளின் (52), ஜேக்கப் ஓரம் (45), அணித் தலைவர் விக்டோரி (44) ஆகியோர் படுமோசமாக சொதப்புகின்றனர். இன்றும் இவர்கள் கைவிடும் பட்சத்தில் மீண்டும் வெறுங்கையுடன் திரும்பவேண்டியது தான்.

## சௌத்தி ஆறுதல்

வேகப் பந்துவீச்சில் சௌத்தி மட்டும் இதுவரை 14 விக்கெட்டுக்களை வீழ்த்தி முன்னணியில் உள்ளார். அடுத்து ஜேக்கப் ஓரம் (08), பென்னட் (06) சற்று ஆறுதல் தருகின்றனர்.



முக்கிய சுழல்பந்து வீச்சாளர் விக்டோரி காயம் காரணமாக சிறப்பாகச் செயற்பட முடியாமல் அவதிப்பட்டு வருகிறார். இன்று இவர் எப்படியும் களமிறங்குவார் என்று நம்பப்படுகிறது. நதன் மக்குலத்தின் திறமை வெற்றிக்கு உதவலாம்.

## வெற்றி யாருக்கு?

உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணி எப்போதும் லீக் சுற்றில் அசத்தும். கடைசியில் முக்கியமான காலிறுதி, அரையிறுதி என்று வரும்போது நெருக்கடிக்கு அடிபணிந்து தோல்வியுடன் திரும்பும். அதேபோல நியூசிலாந்து அணியும் பொதுவாக எப்படியாவது உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறிவிடும். இது தொடருமா? அல்லது மாற்றம் ஏற்படுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## கடந்து வந்த பாதை

### நியூசிலாந்து

லீக் சுற்று

- கென்யாவை 10 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.
- 07 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி.
- 10 விக்கெட் வித்தியாசத்தில் சிம்பாவேயுடன் வெற்றி.
- பாகிஸ்தானை 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.
- 97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கனடாவுடன் வெற்றி.
- இலங்கையிடம் 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி.

### தென்னாபிரிக்கா

லீக் சுற்று

- 07 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகளை வென்றது.
- 231 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்துடன் வெற்றி.
- இங்கிலாந்துடன் 06 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி.
- இந்தியாவை 03 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.
- அயர்லாந்துடன் 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி.
- பங்களாதேஷ் அணியை 206 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NIRU KONDAVIL
A/L 2013 கலை, வர்த்தக கணித வகுப்புகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
26.03.2011 (சனி) 6.30 a.m
நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில் தொலைபேசி எண் :0775086846
மின்னஞ்சல் : nirukondavil@hotmail.com
(3898)

# தேர்தல் ஆணையாளர் நேற்றுடன் ஓய்வு பெற்றார்

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ளார். புதிய தேர்தல் ஆணையாளராக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் நிறைவேற்றப்பட்ட 18-வது திருத்தச் சட்டமூலத்தால் அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்குமுன் சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவிற்கே அதற்கான அதிகாரம் இருந்தது. சுதந்திர தேர்தல் ஆணைக் குழுக்கள் செயலற்றுப் போயிருந்த காரணத்தால் தேர்தல் ஆணையாளர் தனது பொறுப்பிலிருந்து ஓய்வுபெற ஆறு ஆண்டுகள் காத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இல்லாவிடில் கடந்த 2005ஆம் ஆண்டே அவர் ஓய்வுபெற்றிருக்கவேண்டும். (ந-5)

## லிபியாவுக்கு ஆதரவாக இன்று ஆர்ப்பாட்டம்

லிபியா மீது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலான நாடுகள் மேற்கொள்ளும் தாக்குலைக் கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் அமெரிக் கத் தூதரகத்தின் முன்னால் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாக மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளிவாசலில் இருந்து அமெரிக்க தூதரகத்தை நோக்கி ஆர்ப்பாட்ட பேரணி செல்லும் என அவர் கூறினார். (ந-5)

# லிபிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

லிபிய விமானமொன்றை பிரெஞ்ச் போர் விமானமொன்று நேற்று சுட்டு வீழ்த்தியுள்ளது. விமானப்பறப்பு தடை வலயத்தை மீறி பறந்த லிபிய விமானமொன்று அழிக்கப்பட்டதாக பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லிபியாவில் விமான பறப்பு தடை வலயத்தை அமுல்படுத்துவதற்காக கடந்த சனிக்கிழமை கூட்டுப்படைகளின் தாக்குதல்கள் ஆரம்பித்த பின் லிபிய விமானமொன்று கூட்டுப்படைகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும்.

லிபியாவின் மேற்கு நகரான மிஸ்ரடாவுக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கெனவே லிபியாவின் இராணுவத் தளங்கள் பலவற்றின் மீது கூட்டுப்படைகள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன..

கேணல் கடாபி தலைமையிலான லிபிய அரசாங்கத்தின் விமானப்படை இனிமேலும் தாக்குதல் நடத்தும் ஆற்றலுடன் இல்லையென பிரிட்டன் நேற்று முன்தினம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# கடாபியின் படைகள்...

வில்லியம் ஹேக், கேணல் கடாபியின் எதிர்ப்பாளர்களை அரசியல்மாற்றமொன்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறுகேட்டுக்கொண்டுள்ளார்.

பெங்காசியில் இயங்கும் இடைக்கால தேசிய சபையுடன் தொடர்புகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கும் வில்லியம் ஹேக், அந்த சபையின் விசேட பிரதிநிதி மொஹமட் ஜாப்ரீல் லண்டனுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

லிபியா தொடர்பான சர்வதேச மாநாடொன்றை பிரிட்டிஷ் அரசு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# லிபியா மீதான தாக்குதலை கண்டி...

இந்த ஆர்ப்பாட்டத்தில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உள்ளிட்ட பல அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். நேற்றுக்காலை 10 மணியளவில் ஐ.நா. அலுவலகம் முன்பாக ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, பிரித் தானியா, பிரான்ஸ், இத்தாலி, கனடா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுகெதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அத்துடன் லிபியாவிலிருந்து எண்ணெய் வளத்தை கொள்ளையிடவே அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் கொலைகளை செய்வதாகவும் நாங்கள் என்றுமே லிபியாவுடனேயே இருப்போம் எனவும், பான் கீ மூன் ஐக்கிய நாடுகள் சபையை ஒபாமாவிடம் காட்டிக் கொடுத்து விட்டார் என்றும் மீண்டும் ஒரு உலக யுத்தத்தை ஏற்படுத்த பான் கீ மூன் முயற்சி செய்கின்றார் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோசங்களை எழுப்பினர்.

அத்துடன்கடாபிதோல்வியடைந்த பின்னர் லிபியாவால் வெற்றிபெற முடியுமா? ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து கடாபியைக் காப்பாற்றுவோம் போன்ற பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்ததுடன் தாக்குதலில் ஈடுபடும் மேற்குலக நாடுகளின் தலைவர்களின் புகைப் படங்களையும் தாங்கியிருந்தனர்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச இந்த ஆர்ப்பாட்டத்தின் போது கருத்துத் தெரிவிக்கையில்,

லிபியாவில் நடைபெற்ற போராட்டமானது லிபியாவின் உள்நாட்டு விடயம் ஆகும். எனவே லிபியாவின் உள்நாட்டுப்பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள அந்நாட்டு அரசாங்கத்திற்கும் மக்களுக்குமே உரிமையுள்ளது.

எந்தவொரு நாட்டினதும் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதற்கும் அந்நாட்டின் இறையாண்மைக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்கும் பிரிதொரு நாட்டுக்கோ எந்தவொரு அமைப்புக்கோ உரிமை கிடையாது.

ஆனால் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதியுடன் அமெரிக்க மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகள் லிபியா மீது பலவந்தமாக தலையிட்டு விமான மூலமான தாக்குதல்களைமேற்கொண்டுவருகின்றன.

ஈராக்கிற்கு நடந்த நிலையே இன்றும் லிபியாவிற்கும் நடைபெறுகின்றது. லிபியாவின் எண்ணெய் வளத்தை குறிவைத்தே மேற்குலக நாடுகள் இவ்வாறான மனிதாபிமானமற்ற மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

எனவே இவ்வாறான மனிதாபிமானமற்ற தாக்குதல்களை நடத்துவதற்கு அனுமதியளித்த ஐ.நா. செயலாளர் பான் கீ மூனும் ஒரு போர்க்குற்றவாளியே. ஏனைய நாடுகளில் போர்க்குற்றங்களை தேடும் ஐ.நா. உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இன்று லிபியாவில் பாரிய போர்க்குற்றங்களை வெளிப்படையாகவும் தைரியமாகவும் செய்து வருகின்றன.

படைகளைப்பயன்படுத்திஏனைய நாடுகளை ஆக்கிரமிக்க இது ஒன்றும் 19ஆம் நூற்றாண்டுகாலமல்ல.

எனவே லிபியா மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்பதுடன் இந்தத் தாக்குதல்களை இலங்கை வன்மையாகக் கண்டிப்பதாகவும் விமல் வீரவன்ச குறிப்பிட்டார். (ந-5)

# தாய்லாந்தில் நிலநடுக்கம் 6.8 ரிச்டர் பதிவாகியுள்ளது

(பாங்கொக்)

தாய்லாந்தில் நேற்று பிற்பகல் 6.8 ரிச்டர் புள்ளி வேகத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலநடுக்கத்தால்பலத்தசேதம் ஏற்பட்டிருக்கலாம் என அந்நாடு முழுவதும் உணர முடிகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் பெரும் பீதியில் தமது வீடுகளில் இல்லாது பொது இடங்களில் தங்கியுள்ளனர் என அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.(ந-5)

# புலம்...

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது மிகவும் அவசியமானது என நோர்வே அமைச்சர் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்படுத்த துணைபுரியத் தயார் என நோர்வே அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இத் திட்டத்தை நோர்வே புலிச் செயற்பாட்டாளர் நெடியவன் நிராகரித்துள்ளதாக நோர்வே ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-5)

# மனோ...

துள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறானஒரு சந்திப்பு நடைபெற்றதைமனோகணேசனும்உறுதிப்படுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கானஇறுதித் தீர்வைக் காண்பதற்கு இவ்வாறான கலந்துரையாடல்கள் நல்ல முன்னேற்றத்தை கொண்டுவரலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2013
கலைப் பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | :A.K. கீர்த்திராஜன் |
| பொருளியல் | :NB. கஜீதரன் |
| அளவையியல் | :P. கமல்தாசன் |
| புவியியல் | :M. செல்வா |
| இந்துநாகரீகம் | :T. ஸ்ரீஸ் |
| அரசியல் | :A.K. றொபின்சன் |
| வரலாறு | :R.R. ஆனந்தன் |
| நாட.அரங்கி | :S.R. ரமேஸ் |
| கிறிஸ்தவம் | :S. நிரோஜன் |

ஆரம்பம் : 26-03-2011 சனி 8.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2013
வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| கணக்கீடு | : AP. பகீரதன் |
| பொருளியல் | : NB. கஜீதரன் |
| வணிகக்கல்வி | : S. யசோதரன் |

ஆரம்பம் : 26-03-2011 சனி 8.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

நாளை ஆரம்பம்
A/L - 2013
(கலை, வர்த்தகம்)
காலை 8 மணி
DMI Jaffna
(C-2791)

டோகா கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு

| வெற்றிடம் | எண்ணிக்கை | முன்னனுபவம் | ஊதியம் (கட்டார் றியாலில்) |
|---|---|---|---|
| 1)இலகுரக வாகன ஓட்டுநர் (LIGHT VEHICLE DRIVER) | 5 | GCCமுன்னனுபவத்துடன் லைசென்ஸ் | 1200 (37,200 ரூபா + OT) |
| 2)ஓட்டோ மொபைல் & ஓட்டோ மொபைல்எலக்ரீசியன் | 2 | வெளிநாட்டு வாகனங்கள் சம்பந்தமான முன்னனுபவம் | 1200 (37,200 ரூபா + OT) |
| 3)கைத்தொழிற்சாலைமின்னிணைப்பாளர்(Industrial Electrican) | 5 | - | 1000 (31,000 ரூபா + OT) |
| 4)உதவியாளர்கள் Helpers | 20 | - | 900 (27,900 ரூபா + OT) |

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்குப் பணியாளர்கள் உடனடியாக வேண்டப்படுகின்றார்கள். அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க நேர்முகப் பரீட்சை 25/03/2011 முதல் நடைபெறுகின்றது.
நேரம் காலை 10.00 a.m-4.30 p.m வரை நடைபெறும்.
தங்குமிடம், வைத்திய, போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவுக் கொடுப்பனவு நிறுவனத்தினால் வழங்கப்படும். மேலதிக நேரம் (OT) செய்பவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்.
வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் வாரத்தில் 6 நாட்கள் கட்டார் ஊழியர் சட்டத்திற்கு அமைவாக நடைபெறும்.
Avon International (Pvt) Ltd,
# 138, Kanakaratnam Road,Ariyalai,Jaffna.40000,Sri Lanka.
முன்பதிவுகளுக்கு: T.P.: 0215676676, 0215679679
Hotline: 075 9 115 111, E-Mail: avonlk@rocketmail.com
(அ-2793)

VISA PROCESSING ADVICE
Canada மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான VISA சம்பந்தமான செயற்பாடுகளும் சட்ட ஆலோசனைகளும் (VISA PROCESSING ADVICE) எமது அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளூடாகபூர்த்திசெய்துதரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:
Avon International (Pvt) Ltd,
# 138, Kanakaratnam Road, (மாம்பழம் சந்திக்கு அருகாமையில் நாயன்மார்கட்டுக்கு செல்லும் வீதியில்)
Ariyalai,Jaffna.40000,
Sri Lanka.
தொ.பே.இல. :0215676676, 0215679679,
Hotline: 0759115111,
E-Mail : avonlk@rocketmail.com
(அ-2792)

அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள் மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான MyWay யின்
இரண்டு நாள் இலவச ஆங்கில வகுப்பு
காலம் : 26, 27 ஆம் திகதிகள் (சனி, ஞாயிறு)
பிரிவுகள் : காலை 8- 9, 9-10, 10-11, 11-12
மாலை 1-2, 2-3, 3-4, 4-5, 5-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
அனுமதி மற்றும் பயிற்சி புத்தகம் இலவசம்
தனியார் அலுவலர்கள், இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை
MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org